விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 006 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 09 திங்கட்கிழமை (25.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## 13 ஐ அகற்றி

# இந்தியாவை ஓரங்கட்ட ரணில் அரசு சதித் திட்டம்

### நீதியரசர் விக்னேஸ்வரன் பகிரங்கம்



(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்பின் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நீக்குவதையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தொடர்ச்சியாகத் தலையீடு செய்து வரும் இந்தியாவை அவ்விடயத்திலிருந்து முழுமையாக களைவதற்கு பெரும் சதி முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)




## அசுவெசும பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

### ஜனாதிபதி ரனில் உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் அசுவெசும பயன் பெறுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். 15

## டெங்குத் தொற்று தீவிரம் 114 பேர் யாழ்.போதனாவில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தொற்றுக்குள்ளான 114 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தொற்று நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் 15

## சமஷ்டி ஆட்சியே எமது இலக்கு

# ஆட்சியாளர்கள் இனியும் காலம் கடத்த முடியாது

### இரா.சம்பந்தன் காட்டம்



(கொழும்பு)

தமிழ் மக்கள் தங்களுடைய கருமங்களை தாங்களே ஆற்றும் வகையில் சுயநிர்ணய அடிப்படையில் - சமஷ்டி அடிப்படையில் - அதிகாரங்கள் மீளப் பெறமுடியாத வகையில் பகிர்ந் 15

## மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்

# அதிகார பரவலாக்கம் தொடர்பில் தென்பகுதி மக்கள் தேவையற்ற பயம்

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபை மற்றும் அதிகார பரவலாக்கம் தொடர்பில் தென்பகுதி மக்கள் தேவையற்ற பயத்தில் உள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் அமைப்பு "எமது உரிமைகள் எமது வளங்களை பாதுகாப்பதற்காக 15

## டெங்குக் காய்ச்சல் காரணமாக பல்கலை மாணவி உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

டெங்குக் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் இறுதி யாண்டில் கல்வி கற்கும் குணரத்தினம் சுபீனா 15

## வவுனியா சிதம்பரபுரத்தில்

# மோதிக்கொண்ட ஆசிரியர்கள் ஒருவர் வைத்தியசாலையில்

(வவுனியா)

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையில் கல்வி கற்பிக்கும் மூன்று ஆசிரியர்களுக்கு இடையில் கிடையில் முரண்பாடு ஏற்பட்டு அது 15

## யாழ்.மரியன்னை பேராலயத்தில் நள்ளிரவு நத்தார் ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மரியன்னை பேராலயத்தில் யாழ் மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசத்தினால் நத்தார் விசேட நள்ளிரவு திருப்பலி 11.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. (ந-7,9)

## கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு

# 1004 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

(கொழும்பு)

இவ்வருடம் நத்தார் பண்டிகையை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட கைதிகளுக்கு விசேட பொதுமன்னிப்பு இன்று வழங்கப்படவுள்ளது.

இதில் 989 ஆண்களும் 15 பெண்களும் அடங்குவர் என சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

கைதடி சந்தியிலிருந்து 1km தூரத்தில் கைதடி கிழக்கு நூலகத்திற்கு அருகாமையில் 6 பரப்பில் அமைந்துள்ள புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ளும் நேரம்:4pm - 6pm

077 690 6644

(C-8010)

## தேவை

பாவித்த றொட்டி வெட்டும் தானியங்கி மெசின் தேவை.

தொடர்புகளுக்கு

077 137 2711

(18360)


## இந்தியாவை...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின்போது, புதிய பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்கான தீர்வு அதிகாரப்பகிர்வு விடயங்களை மையப்படுத்தி ஒரு வருடத்துக்குள் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்குவதற்கு தற்போதைய பாராளுமன்றத்துக்கு அதிகாரமில்லை என்றும் புதிய பாராளுமன்றத்தில் ஒரு வருட காலத்திற்குள் புதிய அரசியலமைப்பின் ஊடாகவே தீர்வு மற்றும், அதிகாரப்பகிர்வு விடயங்கள் கையாளப் போவதாகவும் ஜனாதிபதி ரணில் .விக்கிரமசிங்க பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

தற்போதுள்ள அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தச்சட்டம் காணப்படுகின்றது. அதுபாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட விடயமாகும். அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களுக்கு எந்தவிதமான தடைகளும் காணப்படவில்லை.

ஆனாலும் அந்த விடயங்களை கையாள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாரில்லாதவராக காணப்படுகின்றார்.

இதற்கான காரணம் எமக்குப் புரியவில்லை. அதேநேரம், புதிய அரசியலமைப்பின் பெயரில் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அரசியலமைப்பிலிருந்து நீக்குவதயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இலக்காகக் கொண்டிருககின்றது என்பது தெளிவாகின்றது. அது மட்மன்றி, தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்தியா காத்திரமான வகிபாகத்தினை க்கொண்டிருக்கின்றது. குறிப்பாக இந்திய, இலங்கை ஒப்பந்தம் அதற்கான ஒரு சான்றாக அமைகின்றது.

இந்நிலையில், அரசாங்கம், புதிய அரசியலமைப்பில் அதிகாரப்பகிர்வு உள்ளிட்டவிடயங்களை வழங்குவதாக கூறி, இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் தலையீட்டை முழுமையாக களைவதற்கே சதித்திட் டமொன்று முன்னெடுக்கப்பட்டுவரு தாகவே நாம் கருதுகின்றோம்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் புதிய அரசியலமைப்பு பற்றிபேசுகின்றார். ஏற்கனவே அவர் பிரதமராக இருந்த தருணத்தில் பாராளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாற்றப்பட்டு, இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்ட நிலையில் எந்த முன்னெடுப்புக்களுமின்றி அந்த அறிக்கை கிடப்பில் போடப்பட்டுள்ளது.

அவர் மீண்டும் புதிய அரசியலமைப்பு பற்றி பேசுவதற்கு பதிலாக ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைச்சாத்தியமாக்குவது தொடர்பில் ஏன் கவனம் செலுத்தவில்லை என்ற கேள்விகள் உள்ளன.

எம்மைப் பொறுத்தவரையில், தற்போதைய அரசியலமைப்பில் காணப்படுகின்ற 13 ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அமுலாக்க வேண்டும். அதன் பின்னர் அதிகாரப்பகிர்வு தொடர்பிலான விடயங்களை படிப்படியாக முன்னெடுக்க வேண்டும் என்பதே நிலைப்பாடாகும்.

அதனைத் தவிர்த்து காலங்கடத்திச் செல்லும், செயற்பாடுகளுக்கும், இந்தியாவை புறந்தள்ளுவதற்கு முயற்சிக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் ஆதரவளிக்க முடியாது என்று அவர் தெரிவித்தார். (ந-7.9)


யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

## பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

காலம் : 31.12.2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 10.00 Am
இடம் : பஞ்சலிங்கம் மண்டபம்

அதிபர்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(C-8003)

மாபெரும் கருத்தரங்கு

## வரலாறு

A/L 2023

M.பத்மன்

B.A(Hons)History, P.G.D.E, Dip.in.Psy, M.A(Hons)History, M.E.D(OUSL)

இடம் : DMI(ஆரியகுளம், யாழ்ப்பாணம்)
காலம் : 26.12.2023 (செவ்வாய்க்கிழமை)
27.12.2023 (புதன்கிழமை)
நேரம் : மு.ப 8.00 - 12.00,
பி.ப 1.00 - 4.00

(C-8009)

◆இந்திய வரலாறு ◆ இலங்கை வரலாறு
◆நவீன உலக வரலாறு ◆ ஐரோப்பிய வரலாறு

T.P : 077 482 5587

## சேவைநலன் பாராட்டும் மணி விழா வாழ்த்தும்



திருமதி மாலினி உலகநாதன் (இ.ஆ.சே. I)
(இசைக்கலைமணி, சங்கீத கலாவித்தகர், பட்டப்பின் கல்வி டிப்ளோமா)
(ஞான ஏந்தல், வட்ஜோதி)

யா/ஏழாலை மகா வித்தியாலயம்

சேவை விபரம்

| | |
|---|---|
| யா/இணுவில் மத்திய கல்லூரி | 14.08.1989 - 16.01.2014 |
| யா/ஏழாலை மகா வித்தியாலயம் | 17.01.2014 - 24.12.2023 |

கற்பித்தல் பணிகளுடன்


- கடமையாற்றிய பாடசாலைகளில் தேசிய மட்டப் போட்டிகளில் மாணவர்களை பங்குபற்ற வழிகாட்டி பல வெற்றிகளை பெற்றமை
- பகுதி நேர விரிவுரையாளர் (பலாலி ஆசிரியர் கலாசாலை )
- தமிழ் இன்னியம் என்ற நிகழ்வினை யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்தமை
- பல கிறிஸ்தவப் பாடல்கள் இயற்றி இசையமைத்தமை
- யாழ். மாவட்ட இசை நடன நிகழ்வுகளிற்கு பக்கவாத்தியமான வயலின் வாசிக்கின்றமை
- வாழ்வக மாணவர்களுக்கு இசைக்கல்வி வழங்கிக்கொண்டிருக்கின்றமை

முதலான பணிகளை ஆற்றி எமது பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் அரும்பாணியாற்றி இன்று ( 25.12.2023 ) திங்கட்கிழமை ஓய்வு பெறும் திருமதி மாலினி உலகநாதன் ஆசிரியையின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதோடு மணிவிழா வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

(C-8001)

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஏழாலை மகா வித்தியாலயம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 07 - 10 - 1930
மறைவு 25 - 11 - 2023

கடந்த 25.11.2023 சனிக்கிழமை அன்று சிவபதப்பேறடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் திரு. கந்தர் நடராசா

மனம் தான் ஆறிடுமோ? உங்களை மறந்து வாழ்ந்திடுமோ?
பொல்லாத துயரமதில் மூழ்கிக் கிடக்கின்றோம்.
நல்லவர்கள் மடிவதில்லை நீங்கள் வாழ்வீர்கள் எம்முடனே
என்றும் நம்பிக்கையுடன் கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்கின்றோம்.

(18359)

கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி.
077 826 9846, 075 832 1990, 077 666 0699
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளவில் அதிகரிக்கும் டெங்கு முதல் 30 நாடுகளில் இலங்கை!

(ஜெனிவா)

**உலகளவில் அதிகளவில் டெங்கு நோய் பரவும் முதல் 30 நாடுகளில் இலங்கை உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.**

இவ்விடயம் தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனம் மேலும் தெரிவிக்கையில்,

"டெங்கு நோய் தொற்றாளர்களின் எண்ணிக்கை வரலாறு காணாத அளவில் அதிகரித்து வருகிறது.

உலகளவில் டெங்கு நோய்த்தொற்றாளர்களில் இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள அதிகரிப்பு பொதுசுகாதார அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு உலகளவில் ஐந்து மில்லியனுக்கும் அதிகமான டெங்கு நோய்த்தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளை, 5,000இற்கும் அதிகமான மரணங்களும் பதிவாகியுள்ளன.

இந்த ஆண்டில், பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்து உட்பட பல நாடுகளில், முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

குறிப்பாக, இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, மியான்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் அதிக டெங்கு அச்சுறுத்தலை எதிர்நோக்கும் முதல் 30 நாடுகளின் தரவரிசையில் உள்ளன." என சுட்டிக்காட்டியுள்ளது. (நி-5)

## தண்டவாளங்களை புனரமைக்க விசேட குழு

(கொழும்பு)

ரயில்கள் தடம்புரளும் சந்தர்ப்பங்களில், தண்டவாளங்களை விரைவாக புனரமைப்பதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பயணிகளின் நலன் கருதி இந்த வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளதாக ரயில்வே ஊடகப் பேச்சாளர் என்.ஜே. இதிபொலகே தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக பெய்த மழை மற்றும் மண்சரிவு காரணமாக மலையக ரயில் மார்க்கத்தில் ரயில்கள் பல தடம்புரண்டதாக அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

# புதிய எதிர்பார்ப்புகளை தோற்றுவிக்கும் நத்தார் பண்டிகை-ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

எதிர்பார்ப்புக்களைப் புதுப்பிப்பதற்கான கடமை மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றி அனைவருக்கும் புதிய எதிர்பார்ப்புக்களை தோற்றுவிக்கும் திருநாளாக இம்முறை நத்தார் பண்டிகை அமைய பிரார்த்திப்போம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள நத்தார் தின வாழ்த்து செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

"வறியவர்களுடன் ஒரு வேளை உண்ணுங்கள்" என்ற விடயத்தை முன் நிறுத்தி, மாட்டுத்தொழுவத்தில் பிறந்த இயேசு கிறிஸ்துவைக் கொண்டாடும் நாம், ஒருபோதும் யதார்த்தத்தை மறக்க கூடாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் மானிடர்களைப் பாவங்களிலிருந்து விடுவிப்பதற்காக சிலுவையில் உயிர் தியாகம் செய்த இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூர்ந்து கிறிஸ்தவர்கள் நத்தார் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

நத்தார் கொண்டாட்டத்தினால் சிறந்த மாற்றங்கள் கிடைக்கும். அவ்வாறான மாற்றங்கள் உளப்பூர்வமானதும் உண்மையானதுமாக இல்லாத போது நத்தார் கொண்டாட்டம் அர்த்தமற்றதாகிவிடும்.

பல்வேறு சவால்கள் நம் முன் நிற்கின்ற தருணத்தில், நாம் நத்தார் பண்டிகையைக் கொண்டாடுகின்றோம்.

நாட்டின் சவால்களின் உண்மைத் தன்மையை அறிந்து கொண்டு, பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக அனைவரும் ஒன்றுபட வேண்டுமென அழைப்பு விடுக்கும் அதே நேரம், உலக மக்கள் அனைவருக்கும் அன்பும் அமைதியும் நிறைந்த பண்டிகையாக இம்முறை நத்தார் பண்டிகை அமைய என வாழ்த்துகிறேன் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## விசேட சுற்றிவளைப்புகள் 3 நாட்களுக்கு இடைநிறுத்தம்

(கொழும்பு)

நாடு முழுவதும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையினால் நேற்று அதிகாலையோடு நிறைவடைந்த 24 மணிநேரங்களில் 1534 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 23 பேரின் சொத்து விவகாரங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் 99 பேர் புனர்வாழ்வுக்காக அனுப்பப்படவுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், அண்மைக்காலமாக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட நடவடிக்கை மூன்று நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (நி-5)

## நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு ஆதரவளிக்க வேண்டும்

### சிறுபான்மை தரப்பினரிடம் நீதி அமைச்சர் கோரிக்கை



(கொழும்பு)

இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தினை உறுதிப்படுத்தி சிறந்தவொரு இலங்கையை கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டே உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படவுள்ளதாக நீதி சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன், இம்முயற்சிக்கு அனைத்து தமிழ்த் தரப்புக்கள் உட்பட அனைத்து சிறுபான்மைத் தரப்பினரும் முழுமையான ஆதரவினை வழங்குமாறு பகிரங்கமாக கோருவதாக தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் ஜனவரியில் ஆணைக்குழு குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான சட்டமூல வரைவு தயாரிப்பு மற்றும் அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-5)

# பணவீக்கத்தின் அளவை அரசாங்கம் குறைக்க வேண்டும்

## இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

பணவீக்கம் அல்லது பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பு வீதத்தை அடுத்த வருடத்தில் 5 வீதத்திற்குள் வைத்துக் கொள்வதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இருந்த போதிலும் இவ்வாறான பணவீக்கத்தை நாட்டு மக்களால் தாங்க முடியுமா என்பது நிச்சயமற்றது என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

தற்போதைய 1.6 சதவீத பணவீக்கத்தின் கீழ் கூட மக்கள் மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அளவுகள் தற்போது உச்சத்தை எட்டியுள்ளதாகவும் மேலும் அதிகரிக்க எதுவும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுவரை வரி விலக்கு அளிக்கப்பட்ட 97 வகையான பொருட்களுக்கு அடுத்த ஆண்டு முதல் 18 சதவீத புதிய வற் விதிக்கப்படவுள்ளதுடன் ஏனைய பொருட்களுக்கான வரியும் 3 சதவீதம் முதல் 18 சதவீதம் வரை அதிகரிக்கப்படும்.

இந்த வரி விதிப்பினால் இலங்கை மத்திய வங்கியின் பணவீக்கத்தை 5 வீதமாக பேண முடியுமா என்பது சந்தேகம் என கூறும் பேராசிரியர் மேலும் 5 வீதம் பணவீக்கம் ஏற்பட்டாலும் மக்கள் அதை சமாளிப்பது கடினம்.

எனவே, தற்போதைய பணவீக்க அளவை 1 சதவீதமாக குறைக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

## பாலஸ்தீனர்களுக்கு தேயிலை

(கொழும்பு)

சவூதி அரேபியா ஊடாக இலங்கையிலிருந்து ஆயிரம் கிலோகிராம் தேயிலை, பாலஸ்தீனர்களுக்கு அனுப்பப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை தேயிலை சபையினால் சேகரிக்கப்படும் இந்த நன்கொடை, விரைவில் சவூதி அரேபியாவின் ரியாத் நகருக்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் கொண்டு செல்லப்படவுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட காஸா மற்றும் மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2 ஆவது போட்டியிலும் நியூசிலாந்து வெற்றி

வங்காளதேசம் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையே யான 2ஆவது ஒருநாள் போட்டியில் நியூ சிலாந்து அணி 7 விக்கெட்டுக் களால் வெற்றி பெற்றுள் ளது. டாஸ் வென்ற நியூ சிலாந்து அணி பந்து வீச்சை தேர்வு செய் தது.

அதன்படி பங்காளதேஷ் அணி யின் தொடக்க வீரர்களாக சவு மியா - அனு முள் களமிறங்கி துடுப்பெடுத்தாடிய போது அடுத்த டுத்து விக்கட்டுக்களை பறி கொடுத்தனர்.

ஒருமுனையில் விக் கெட்டுகள் இழந்தாலும் மறு முனையில் நங்கூரம் போல் நின்ற சவுமியா சதம் அடித்து அசத்தினார். இவர் 169 ரன்களில் அவுட் ஆனார். மற்ற வீரர்கள் சொற்ப ரன்னில் வெளியேற வங்காளதேசம் அணி 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளை யும் இழந்து 291 ரன்கள் எடுத்தது.

இதனையடுத்து நியூசி லாந்து அணியின் தொடக்க வீரர்க ளாகவில் யங்- ரச்சின் ரவீந்திரா ஆகியோர்கள மிறங்கினர். இரு வரும் சிறப்பாக விளை யாடி ரன் களை குவித் தனர்.



அதிரடியாக விளையாடிய ரச் சின் ரவீந்திரா 45 ரன்களில்ஆட்டமிழந்தர் அடுத்து வந்த டாம் லாதம்-டாம் ப்ளண் டெல் ஜோடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென் றது. இறுதியில் நியூசி லாந்து அணி 46.2 ஓவர்களில் 3 விக் கெட்டு களை இழந்து 296 ரன்கள் எடுத்தது.3 போட்டிகள் கொண்ட தொடரை நியூசி லாந்து அணி 2-0 என்ற கணக்கில் தொடரை கைப் பற்றியது. இரு அணி களுக்கு இடையேயான சம்பி ரதாய ஆட்டமான கடைசி ஒருநாள்போட்டிநாளை இடம் பெறவுள்ளது. (6)

## குழப்பத்தில் வீரரை மாற்றி எடுத்த பஞ்சாப்




ஐ.பி.எல்- 2024 மினி ஏலத்தில் சஷான்க் சிங் என்ற பெயரில் இரண்டு வீரர்கள் இருந்த நிலையில், குழப்பத்தில் இருந்த பஞ்சாப் அணி 19 வயதான சஷான்க் சிங் என்ற வீரரை வாங்குவதற்கு பதிலாக 32 வயதான சஷான்க் சிங்கை ஏலத்தில் எடுத்துள்ளது.

இது தொடர்பான தகவல்கள் சமூக வலைத்தளங் களில் வைரல் ஆக துவங்கியது. இந்த நிலையில், சஷான்க் சிங்கை வாங்கியது தொடர்பாக பஞ்சாப் கிங்ஸ் அணி தனது எக்ஸ் அக்கவுண்டில் விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பான பதிவில், "சஷான்க் சிங்கை வாங்க வேண்டும் என்ற திட்டம் எங்களிடம் இருந்தது. பட்டியலில் ஒரே பெயருடன் இரண்டு வீரர்கள் இருந்ததே குழப்பத்திற்கு காரணமாகி விட்டது. அவரை அணியில் எடுத்ததில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். எங்கள் வெற்றிக்கு அவர் பங்களிப்பதை பார்க்க விரும்புகிறோம்," என்று குறிப்பிட்டுள்ளது. (5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2999

பிரணவன்




சனா




தாரணி




தரன்




ரஞ்சி




குமார்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி முதல் பெற்றோலுக்கு வரி அறவீடு செய்ய தீர்மானம்

(கொழும்பு)

பெற்றோலுக்கான பெறுமதி சேர்வரி 10.5 வீதத்தினால் அதிகரிக்கும் என ஜனாதிபதி செயலகத்தின் அரச வருமானப் பிரிவின் பணிப்பாளர் கே.கே.ஐ.எரந்த தெரிவித்துள்ளார்.

பெற்றோலுக்கு இதுவரையில் அறவீடு செய்யப்பட்டு வந்த 7.5 வீத துறைமுக மற்றும் விமான நிலைய வரி ஜனவரி மாதம் முதல் நீக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் குறித்து தொழிற்சங்கங்களை தெளிவுபடுத்தும் நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பெறுமதி சேர் வரி 18 வீதம் அறவீடு செய்யப்பட உள்ளதுடன், பெற்றோலுக்கு 10.5 வீத வரி அறவீடு செய்யப்படும் எனவும் எரந்த குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பெற்றோல் டீசலுக்கான பெறுமதி சேர் வரி குறித்து ஆராய்ந்து வருவதாக மின்வலு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசசேகர அண்மையில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)


# தனிமையில் வசித்த மூதாட்டி வீட்டிற்கு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல்

(கரணவாய்)

யாழ்ப்பாணத்தில் தனிமையில் வசித்து வரும் மூதாட்டி வீட்டுக்கு வன்முறை கும்பல் ஒன்று பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளது.

கரவெட்டி விக்னேஸ்வரா வீதியில் உள்ள வீடொன்றில் மூதாட்டி ஒருவர் தனிமையில் வசித்து வருகின்றார். அவரது வீட்டுக்கு சென்ற வன்முறை கும்பல் ஒன்று பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தி விட்டு தப்பி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-33-60)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த ஒளிவிழாவும் கரோல் கீத இசை நிகழ்வும் கடந்த 20 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத் துறையின் தலைவர் பேராசிரியர் அருட்தந்தை ஜே.சி போல் றொகான் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# ஹெரோயினுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தாவடி பகுதியில் 8 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சுன்னாகம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த இளைஞனை கைது செய்து சோதனையிட்ட போது அவரது உடைமையில் இருந்து 8 கிராம ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

அதனை அடுத்து இளைஞனை கைது செய்த பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-33)

# நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

கலாபூஷணம் புலோலியூர் ஆ.இரத்தினவேலோனின் 'அன்றலர்ந்த மலர்கள்'நூல் அறிமுகம் மற்றும் நூலாசிரியர் கௌரவிப்பு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு புலோலி யா/புற்றளை மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 550 | 600 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 150 | 180 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1400 | 1200 |
| தக்காளி | 650 | 650 | 700 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 150 | 150 | 120 |
| கோவா | 450 | 400 | 400 | 500 |
| கரட் | 400 | 540 | 550 | 700 |
| பூசணி | 180 | 180 | 180 | 200 |
| புடோல் | 300 | 300 | 240 | 300 |
| வாழைக்காய் | 180 | 200 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 500 | 480 | 450 | 500 |
| பாகற்காய் | 800 | 1000 | 500 | 800 |
| வெண்டக்காய் | 320 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 600 | 600 | 500 | 600 |
| லீக்ஸ் | 450 | 480 | 450 | 480 |
| பீற்றூட் | 800 | 600 | 600 | 700 |
| கறிமிளகாய் | 800 | 600 | 500 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 450 | 400 | 650 | 600 |
| கத்தரிதம்புள்ள | 500 | 300 | 400 | 550 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 150 | 200 |
| தேசிக்காய் | 800 | 400 | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 650 | 500 | 600 | 600 |
| வெங்காயப்பூ | - | -- | -- | -- |
| முள்ளங்கி | 160 | 200 | 200 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 |

# இராசிபலன்

25.12.2023
மார்கழி 09, திங்கட்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 6.03 மணிவரை
ரோகினி முன்னிரவு 10.22 மணிவரை

சுபநேரம் -12.26-1.56மணிவரை
இராகுகாலம்-7.56-9.26 மணிவரை
நத்தார் பண்டிகை, பாலன் பிறப்பு

சந்திராஷ்டமம்
சித்திரை, சுவாதி.

வளவன்

**மேஷம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், வருமானம் பெருகி வளம் காணும் நாள், அரசு வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**துலாம்** பொதுவழியில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது நிதானம் தேவை.

**மகரம்** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மறைமுகப் போட்டிகள் மாறும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**ரிஷபம்** எந்தவொரு வேலையையும் நாளை என தள்ளி வைக்காமல் இன்று செய்து முடிப்பீர்கள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**சிம்மம்** தொழிலை விருத்தி செய்ய தீட்டிய திட்டங்கள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வயில் அமையும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவம் ஒன்று நடைபெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம், சுப விரயங்கள் சற்று அதிகரிக்கும், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மாற்றுக் கருத்து உடையோர் மனம் மாறுவர்.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களிற்கு பின்னணியாக நடந்து கொள்வர், ஆரோக்கியமான நாள்.

**மீனம்** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும், காரிய நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்

நீ நேர் வழியில் நடக்கத் தொடங்கு. உலகத்தின் பாதை உனக்கு புலப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப் பாவனையாளர்கள் உள்ளடங்கலாக

# கடந்த 7 நாட்களில் 250 பேர் முல்லைத்தீவில் கைது



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பத்து பொலிஸ் நிலைய பிரிவுகளிலும் கடந்த ஏழு நாட்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் போதைப்பொருள் பாவனையாளர்கள் 113 பேர் உள்ளடங்கலாக 250 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் 25 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் இடம் பெற்று வருகின்ற போதை ஒழிப்பு திட்டத்தின் கீழ் பொலிஸாரினால் விசேடமான சுற்றிவளைப்புகள் பல நடத்தப்பட்டு பல்வேறு கைதுச் சம்பவங்கள் மற்றும் பல்வேறு பொருட்கள் மீட்கப்படுகின்ற சம்பவங்கள் இடம் பெற்றுவருகிறது.

இந்த வகையிலே சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் வகையிலே பொலிஸாரினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்பு நடவடிக்கை நேற்றும் முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-299)



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு மாகாணப் பாடசாலைகளிற்கிடையே நடத்தப்பட்ட "மாண்புறு மாணவர் சமுதாயம்" எனும் தொனிப் பொருளிலான மாணவர் திறன் விருத்தி போட்டியில் கிளிநொச்சி முக்கொம்பன் மகாவித்தியாலயத்தின் தரம் 4 மாணவன் உதயகுமார் அக்ஷயன் மாகாணமட்ட பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். (படம்-கிருஷ்ணகுமார்)



தேசிய ரீதியில் வெற்றிகளை பெற்றுக் கொடுத்த கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. (படம்-கிருஷ்ணகுமார்)

## கசிப்புடன் கைது

(சாவகச்சேரி)

ஒரு போத்தல் கசிப்புடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொடிகாமப் பொலிஸாரால் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம்-தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த மேற்படி சந்தேக நபர் கசிப்பினை விற்பனைக்காக எடுத்துச் சென்ற வேளையில் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன்-மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-30)



மலேசியாவில் நடைபெற்ற UCMAS சர்வதேச மனக்கணிதப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் திருநெல்வேலி UCMAS கிளையில் பயிலும் 19 மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. (படம்-சிவசாந்தன்)

## இனங் காணப்படாத சடலங்களை பொறுப்பேற்றல் தொடர்பாக...

(யாழ்ப்பாணம்)

30.11.2023 அன்று எமது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சுப்பையா "கோபாலகிருஷ்ணன் (வயது- 66) என்பவர் 21.12.2023 அன்று இறந்து விட்டார். இவர் சுங்கம் வீதி, திருகோண மலை எனும் முகவரியை தனது முகவரியாக வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது கொடுத்துள்ளார்.இவருடைய உறவினர்களை அடையாளம் காணமுடியாமல் உடல் பிரேத அறையில் வைக்கப்பட்டு உள்ளது.

மற்றும் ஜோசேப் கிறிஸ்ரி என்பவர் (வயது-65 ) 16.11. 2023 அன்று எமது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவர் 18.12. 2023 அன்று இறந்து விட்டார். தன்னுடைய விலாசமாக பொக்கந்தறை CC கம்பர்மலை, உடுப்பிட்டி எனும் விலாசமும் அருணாச்சலம் கொழும்பு எனும் நபரின் பெயரை வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது கொடுத்துள்ளார். இவருடைய உறவினர்களை அடையாளம் காணமுடியாமல் இவரின் உடல் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

04.12.2023 விடுதி இல - 34 இல் அனுமதிக்கப்பட்ட திருமதி.பி.சரஸ்வதி (வயது -60) 22.12.2023 அன்று இறந்து விட்டார். இவருடைய உறவினர்களை அடையாளம் காணமுடியாமல் உடல் பிரேத அறையில் வைக்கப்பட்டு உள்ளது.

இவர்களின் உடல்களை அடையாளம் காட்டி 15 தினங் களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-5)



மாற்று வலுவுடையோர் தினத்தை முன்னிட்டு வலயக்கல்வி மற்றும் கிளிநொச்சி வடக்கு விசேட கல்வி பிரிவினால் நடத்தப்பட்ட மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு நேற்று கிளி/பளை மத்திய கல்லூரியில் சிறப்பாக இடம்பெற்றது. (படம்-தேவானந்தன்)

## மன்னாரில் சூடுபிடித்துள்ள பண்டிகைக்கால வியாபாரம்



(மன்னார்)

நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மன்னார் நகரசபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வரும் நிலையில். தற்போது பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ளன.

மன்னார் நகர சபையினால் கேள்வி கோரலின் அடிப்படையில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட வியாபார நிலையங்கள் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. உள்ளூர் மற்றும் தென்பகுதி வியாபாரிகள் இடத்தை குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்வரும் 31 ஆம் திகதி வரை குறித்த பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகள் இடம் பெறும்.

தற்போது மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் மன்னார் நகர்ப் பகுதிக்கு வருகை தந்து பொருட்களை கொள்வனவு செய்து [illegible]



யாழ்.பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் யேசுபாலன் பிறப்பின் கிறிஸ்மஸ் ஒளிவிழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ்.பொதுசன நூலகத்தின் கேட்போர் கூடத்தில் யாழ்.மாநகரசபை பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.அன்ரன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது (படம்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வருடாந்த திருவாசக விழா-2023

**இடம்:**

சந்நிதியான் ஆச்சிரமம் - செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

**காலம்:**

26.12.2023 செவ்வாய்க்கிழமை - காலை 09.30 மணி.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவங்களும் திருவாசக ஏடுகளும் ஆலயத்திலிருந்து தேவார பாராயணத்துடன் ஆச்சிரமத்திற்கு எடுத்துவரப்படல்.

**ஆசியுரை:** நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்

**அறிமுகவுரை:** சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள்.

**கலைநிகழ்வு:** சிறுப்பிட்டி நாகதம்பிரான் அறநெறிப்பாடசாலை மாணவர்கள்.

**சிறப்புச் சொற்பொழிவு:** "மழக் கையிலங்கு பொற்கிண்ணம்"

**வழங்குபவர்:** திரு நா. நவராஜ் அவர்கள் (உளவளத் துணையாளர்)




**திருவாசக இசை:**

**வழங்குபவர்:** இசை நாவரசு M.S. பிரதீபன் அவர்கள்

**பக்கவாத்தியங்கள்:**

**ஹார்மோனியம்:** இசைசுரபி N. செல்வச்சந்திரன்

**புல்லாங்குழல்:** நாதவினோதன் K. தேசிகன்

**மிருதங்கம்:** நாதமணி M. லோகேந்திரன்

**கெஞ்சிரா:** வித்வான் N. கேதாரநாத்

**நன்றியுரை:** திரு ஆ. சிவநாதன் அவர்கள் (இளை. அதிபர்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை - செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

(8004)

தென்னாடு

# மார்கழிப் பெருவிழா 2023

திருவாசகத்தில் கற்போர்மனதைப் பெரிதும் கவர்வது,
இலக்கியச்சுவையா? பத்திச்சுவையா?

**நடுவர்**

செந்தமிழ்சொல்லருவி.ச.லலீசன்
(அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)



இலக்கியச்சுவையே! | பத்திச்சுவையே!



செல்வன்.ஜெயபாலன் தவேதன்
(மாணவன், யாழ். இந்துக்கல்லூரி)



செல்வன் குணராசா மிதுராஜ்
(மாணவன், யாழ். இந்துக்கல்லூரி)



செல்வி. அபிநயா றஜீபன்
(மாணவி, வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை)



செல்வி.கனிமொழி கணேசானந்தன்
(மாணவி, யா/ மகாஜனக் கல்லூரி)



செல்வன்.மகேந்திரன் திகழ்ஒளிபவன்
(மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி)



செல்வி. ஆதிரை பிரதீபன்
(மாணவி, யா/ மகாஜனக் கல்லூரி)

(C-8006)

**2023.12.25 அன்று மார்கழிப் பெருவிழாவின் மாலை அரங்கில் இலங்கைவேந்தன் கல்லூரியில் இடம்பெறும்**

உ
திருச்சிற்றம்பலம்

தென்னாடு

# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும்

# மார்கழிப் பெருவிழா - 2023

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை மார்கழித் திங்கள் 9 ஆம் நாள் (டிசெம்பர் 25) திங்கட்கிழமை, இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் (கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) நடாத்த திருவருள் கூடியுள்ளது.

**மார்கழித் திங்கள் 9 ஆம் நாள் (டிசெம்பர் 25) திங்கட்கிழமை**

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மங்கள்நாதர் திருக்கோயில் வழிபாட்டுடனும் மற்றும் திருமுறை. நால்வர் பல்லக்கில் திருவீதியுலாவிற்கு எழுந்தருளலுடன் அரங்கங்கள் ஆரம்பமாகும்.

**காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்**

(காலை 8.45 மணி தொடக்கம் 12.30 மணிவரை)

- 8.45 மணி - திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- 9.00 மணி - தொடக்க உரை - சிவத்திரு. **குணரத்தினம் பார்த்தீபன்** (முதல்வர்-தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)
- 9.10 மணி- அருளுரை-தவத்திரு.**வேலன் சுவாமிகள்** (முதல்வர்-சிவகுரு ஆதீனம்)
- 9.20 மணி- திருமுறை விண்ணப்பம்-சிவத்திரு.**பத்மநாதன் சிவமைந்தன்** குழுவினர்
- 9.45 மணி- தலைமை உரை -கலாநிதி **பொன்னுத்துரை சந்திரசேகரம்** (தலைவர் - சைவசித்தாந்தத் துறை. யாழ்ப்பாணப் பலகலைக்கழகம்)
- 10.00 மணி- வாழ்த்துரை - பேராசிரியர்.சி.**சிறிசற்குணராசா** (துணைவேந்தர்-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- 10.15 மணி- சிறப்புரை - தலைப்பு - **"பெரியபுராணமும் திருவாசகமும்"** வழங்குபவர் - **சிவ.பவானி அ.தியாகராசன் ஐயா** (அரன்பணி அறக்கட்டளை)
- 12.15 மணி-கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களைச் சிறப்புச் செய்யும் நிகழ்வு

**அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 மணி முதல்**

**மாலை அரங்கம் - சேக்கிழார் அரங்கம்**

**(1.30 மணி முதல் 4.30 மணிவரை)**

- 1.30 மணி -தலைமை உரை - சிவத்திரு **நல்லையா விஜயசுந்தரம்** (தலைமை ஆசிரியர் - வலம்புரிப் பத்திரிகை)
- 1.45 மணி - சிவதாண்டவம் (யா/குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்)
- 2.00 மணி- சிறப்புரை - தலைப்பு - **"நானோ இதற்கு நாயகமே"** வழங்குபவர் - சிவத்திரு.ச.**விநாயகமூர்த்தி ஐயா** (ஓய்வுநிலை போதனா ஆசிரியர்)
- 3.00 மணி-பட்டிமண்டபம்-தலைப்பு-**'திருவாசகத்தில் கற்போர் மனதை ஈர்ப்பது, பத்திச்சுவையே!- இலக்கியச்சுவையே!'**
- 4.00 மணி- பரிசளிப்பு நிகழ்வு-திருவாசகக் கட்டுரைப்போட்டிக்கான பரிசில் வழங்கல்
- 4.20 மணி- நன்றியுரை - சிவத்திரு. **செந்தமிழாதன்** (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. **செந்தமிழாதன்** மற்றும் சிவத்திரு. **பாலுசாமி சிவமாதவன்** (ஆசிரியர்கள் - தெனனாடு திங்கள் இதழ்)

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**
திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம். 021 222 9722 / 070 770 1111.**

**விழா அனுசரணை-**

Ken Tower | LAND MAARK ENGINEERING (PVT) LTD

(C-8007)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நகைச்சுவை நடிகர் போண்டா மணி மரணம்



(டில்லி)
நகைச்சுவை நடிகர் போண்டாமணி காலமானார்.

இலங்கையை பூர்வீகமாக கொண்ட நடிகர் போண்டா மணி, 1991 ஆம் ஆண்டு வெளியான நடிகர் பாக்யராஜின் "பவுனு பவுனு தான்" படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகம் ஆனார்.

அதனை தொடர்ந்து "சுந்தரா டிராவல்ஸ்", "மருதமலை", "வின்னர்", "வேலாயுதம்", "ஜில்லா" உள்ளிட்ட 150 இற்கும் அதிகமான திரைப்படங்களில் நடித்து புகழ்பெற்றார்.

சென்னை பொழிச்சலூரில் அவர் குடும்பத்துடன் வசித்து வந்தார். இந்நிலையில் தான் சமீபத்தில் 2 சிறுநீரகங்களும் செயலிழந்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் தனது வீட்டில் திடீரென்று மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். (நி-5)

## உக்ரைன் மீதான

## போர்நிறுத்தத்திற்கு



(கீவ்) —
ரஷ்ய ஜன
சண்டையை
தெரிவிக்க
வெளியிட்டு


உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான சண்டை 22 மாதங்களாக நடந்து வருகிறது.

விளாடிமிர் புடின் ஆட்சியில் இருக்கும் வரை ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதில்லை என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி உறுதியாக கூறியுள்ளார்.

இந்நிலையில், உக்ரைன் மீதான தனது ஏறக்குறைய இரண்டு வருட யுத்தத்தில் தற்போது போர்நிறுத்தம் பற்றி விவாதிக்க தயாராக இருப்பதாக வெளிநாட்டு ஊடகமொன்று

## தமிழ்நாட்டு வெள்ளப்பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது

### நிர்மலா சீதாராமன்



(டில்லி)
தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்கள் கடும் பாதிப்பை சந்தித்துள்ளன.

தாமிரபரணி ஆற்றில் தொடர்ந்து வெள்ளம் கரை புரண்டு ஓடுவதாலும் குளங்கள் நிரம்பி உடைந்ததால் வெளியேறிய தண்ணீராலும் தூத்துக்குடி மாவட்டத்தின் பல கிராமங்கள் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குளங்களில் இருந்து வெளியேறிய தண்ணீர் வயல் வெளிகள் மற்றும் தாழ்வான இடங்களில் தேங்கி நிற்பதால் அதனை அகற்றுவதில் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ள போதிலும் ,இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தநிலையில், இந்தியாவில் இதற்கு முன்னர் தேசிய பேரிடர் என்ற ஒன்று இதுவரை அறிவிக்கப்படவில்லை என்பதால், தமிழ்நாட்டு வெள்ள அனர்த்தத்தையும் தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் குற்றஞ்சாட்டியுள்ளார். (நி-5)

## இஸ்ரோவுக்கு உயரிய விருது வழங்கியது ஐஸ்லாந்து

(ஹூசாவிக்)
சந்திரயான் 3 விண்கலத்தின் வெற்றிக்காக ஐஸ்லாந்து இஸ்ரோவுக்கு உயரிய விருது வழங்கியுள்ளது.

நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கி ஆராய்ச்சிகளை மேற்கொள்ள கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்து சந்திரயான்-3 விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

இஸ்ரோ அனுப்பிய சந்திரயான் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் ஒகஸ்ட் 23 ஆம் திகதி நிலவின் தென் பகுதியில் தரையிறங்கி இந்திய மக்கள் அனைவரையும் பெருமையடையச் செய்தது.

இந்தச் சாதனைக்கு பிறகு உலகின் முன்னணி நாடுகள் இஸ்ரோ உடன் இணைந்து செயற்பட முன் வந்துள்ளன.

இந்நிலையில், சந்திர யான் 3 விண்கலத்தின் வெற்றிக்காக ஐஸ்லாந்தின் ஹூசாவிக் நகர ஆய்வு அருங்காட்சியகம் இஸ்ரோ நிறுவனத்தைக் கௌரவித்துள்ளது.

இஸ்ரோவுக்கு 2023-லீப் எரிக்சன் லூனார் என்ற உயரிய விருதை வழங்கியது.

இதனை இஸ்ரோ சார் பில் ஐஸ்லாந்துக்கான இந் திய தூதர் ஷியாம் பெற்றுக் கொண்டார். இந்த விருதை வழங்கியதற்காக ஐஸ்லாந்துக்கு இஸ்ரோ தலைவர் சோம்நாத் நன்றி தெரிவித்துள்ளார். (நி-5)




## சீனாவில் நிலநடுக்கம் அதிகரிக்கும் உயிரிழப்பு

(பீஜிங்)
சீனாவின் வடமேற்குப் பகுதியில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 148 ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

அந்த நாட்டின் கான்சு மாகாணம், ஜிஷிஷன் மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.2 அலகுகளாகப் பதிவானது. சீனாவின் யுன்னான் மாகாணத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட நில நடுக்கத்தில் 617 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ன 2 வருட யுத்தம்

# ...கு தயாராகும் புடின்


**...னாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைனுக்கு எதிரான ...யை நிறுத்துவதற்கான தனது தயார் நிலையை ...கவுள்ளதாக சர்வதேச ஊடகமொன்று செய்தி ...டுள்ளது.**

செய்தி வெளியிட்டுள்ளது.

அந்நேரம் அவர் குறைந்த பட்சம் செப்டெம்பரில் இருந்து தற்போதைய நிலையில் சண்டையை உறைய வைக்கும் போர் நிறுத்தத்திற்கு தான் தயாராக இருப்பதாக சமிக்ஞை செய்து வருகிறார் என்றும் சர்வதேச ஊடகம் தெரிவித்துள்ளது.

கீவிற்கான மேற்கத்தேய உதவிகள் வறண்டு போகும் அபாயத்தில் உள்ள நிலையில் இந்த செய்தி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கிறிஸ்மஸ் மரம் முறிந்து விழுந்ததில் பெண் உயிரிழப்பு



(பிரசெல்ஸ)

பெல்ஜியத்தில் புயல் காரணமாக பெரிய கிறிஸ்மஸ் மரம் முறிந்து விழுந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து காரணமாக மேலும் இரு பெண்கள் காயமடைந்துள்ளதாக வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சம்பவத்தில் 63 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

பெண் மீது விழுந்த கிறிஸ் மஸ் மரம் 20 மீற்றர் (66 அடி) உயர முள்ளது என்று கூறப்படுகிறது. (நி-5)

## வெள்ளக்காடான கலிபோர்னியா இருளில் மூழ்கிய பிரதேசங்கள்



(சாக்ரமெண்டோ)

அமெரிக்காவின் கலி போர்னியா பகுதியில் கடந்த சில நாடகளாக கனமழை கொட்டி தீர்த்தது. கடற்கரை பகுதிகளிலும் கனமழை பெய்தது.

கனமழையால் சாலைகள் அனைத்தும் வெள்ளக் காடாக மாறியதால் பல வாகனாங்கள்தண்ணீரில்மூழ்கின.

தொடர்ந்து, மின்கம்பங்கள், மரங்கள் உள்ளிட்டவை சாய்ந்ததால் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு பல இடங்கள் இருளில் மூழ்கியுள்ளன.

இதேபோல தெற்கு கலிபோர்னியாவில் உள்ள ஆக்சினாட், வென்சுரா பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்டன.

அங்கிருந்து 100 இற்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடத்திற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

அதேவேளை குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்து இருப்பதால் கலிபோர்னியா மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## தாய்வான் தேர்தல்களில் தலையிடும் சீனா



(தாய்பெய்)

தாய்வானில் தேர்தல்கள் நடைபெறவுள்ள சூழலில் அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் தலையீடு செய்யும் முயற்சிகளை சீனா முன்னெடுத்து வருவதாக அந்நாட்டு அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நிலையில், ஜனவரி மாதம் 13 ஆம் திகதி ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்கள் தாய்வானில் நடைபெற உள்ளன.

இவ்விடயம் தொடர்பாக தாய்வான் அதிகாரிகள் தெரிவிக்கையில்,

“இத்தேர்தல்களில் போட்டியிடும் சீன சார்பு வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் முயற்சிகளை சீனா மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் நூற்றுக்கணக்கான உள்ளூர் தாய்வான் அரசியல்வாதிகள் குறைந்த செலவில் சீனாவுக்கு பயணங்களை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.” எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த மாதத்தில் தாய்வானின் நீரிணைப் பகுதியிலும் கடற்பரப்பிலும் சீனப் படையினரின் நடமாட்டங்களும் ஆராய்ச்சிக் கப்பல்களின் பிரசன்னமும் அதிகரித்து காணப்பட்டது.

இவை உண்மையான உளவியல் போரென தாய்வான் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

தாய்வான் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் சில தினங்களுக்கு முன்னர் சீனாவின் 12 போர் விமானங்களும் வானிலை பலூனும் தம்மை கடந்து சென்றதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

## வியட்நாமில் குரங்கம்மையால் 117 பேர் பாதிப்பு, 6 பேர் பலி

(ஹனோஸ்)

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமில் குரங்கம்மை நோய் வேகமாக பரவுகிறது.

நாட்டின் தெற்கு மாகாணமான லாங் ஆன்னில் நோய் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில் அங்கு இதுவரை 117 பேர் பாதிக்கப்பட்டதோடு பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பாக ஹோ சி மின் நகரத்தின் வெப்ப மண்டல நோய்களுக்கான மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் ஹுய்ன் தி துய் ஹோ கூறுகையில், கடந்த மூன்று மாதங்களில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 49 பாதிப்புகளில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

40 பேர் குணமடைந்ததுடன், மூன்று பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெற்றிலை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name-Piper betle
English Name-Betel
Family-Piperaceae
Sinhala Name- Bulox

இலையின் நிறத்தாலும் மணத்தாலும் கார்ப்பு சுவையாலும் வெற்றிலை மூவகைப்படும்.

1. மிகுந்த மணமும் காரமும் இல்லாதது- வெற்றிலை.

2. கருமையும் காரமும் மிகுந்தது- கம்மாறு வெற்றிலை.

3.கர்பூர மணமும் சிறிதளவு காரமும் உடையது- கற்பூர வெற்றிலை.

இவற்றைவிட வெற்றிலையில் வெள்ளிலை மற்றும் நாகவல்லி ஆகிய இனங்களும் உண்டு. இவுற்றின் மருத்துவ குணங்கள் வெற்றிலையிலிருந்து சற்று வேறுபட்டவையாகும். சித்த மருத்துவத்தில் வெற்றிலையின் மருத்துவ குணங்கள் பல கூறப்பட்டுள்ளன. தமிழரின் பாரம்பரியத்தில் தாம்பூலம் தரித்தல் ஒரு முக்கியமான வழக்கமாக காணப்படுகின்றது.

சித்த மருத்துவ நூல்கள் காலை,மதியம்,இரவு ஆகிய மூன்று வேளைகள் மட்டும் தாம்பூலம் தரிக்க வேண்டும்.என்று கூறுகின்றன. பெரும்பாலும் ஆகாரத்தின் பின்னர் வெற்றிலை மெல்லும் பழக்கம் காணப்படுகின்றது.

வாய்த் துர்நாற்றம் அழுக்கு முதலியவைகளை நீக்குவதுடன் சாப்பிட்டபின் இரைப்பையில் அமிலத் தன்மை அதிகரிப்பதையும் கட்டுப்படுத்தும். வெற்றிலையை வாய்க்குள் வைத்து மெல்லும்போது. அதிக உமிழ்நீர் சுரக்கிறது. வெற்றிலை மெல்லுவது பற்றி இருபாலைச் செட்டியார் பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளார்.

"வெற்றிலை துவர்க்கா யுண்ணும் விழுங்கேளு நாடாமுந்தான்
பெற்றிரு காலை உச்சி பேசிய மாலையென்றே
உற்ற முக்கால முண்பா யொழிவி லாய் புளித்த வேப்பம்
பற்றிரு கிருமி சேடம் பவ்வல் தானுமின்றாம்
பேதியா றாவரபசி பெருகிய வரோசி சோம்பல்
காதிடு மகிழ்ச்சியோடு கருதிய வழமுண்டாகும்
சாதிக்காம் சூடனேலஞ் சார்வ சுவாசியோடு
நீதகல் கராம்பு கூட்டித் தின்னவுத்தம மான்றே..

அதாவது வெற்றிலையை காலை, மதியம், மாலை என்ற மூன்று பொழுது மட்டும் சாதிக்காய், பச்சைக் கற்பூரம், ஏலம், வசுவாசி, கராம்பு, பாக்கு என்பவற்றுடன் சேர்த்து உண்ண பல்வலி, நீர்வரட்சி, நாக்கு சுவையின்மை என்பவை நீங்கி மகிழ்ச்சியும் அழகும் உண்டாகும்.

இருதய நோய்களுக்கு பயன்தரும் Digitalis எனும் மூலிகையிலும் பார்க்க சிறப்பானதாக வெற்றிலை செயலாற்றும்.

எனவே வெற்றிலையை உரிய முறையில் உண்டால் தீங்கு ஏற்பட மாட்டாது.ஆனால் அவ்விதம் கடைப்பிடிக்கத் தவறுபவர்கள் அதன் பாவனையை



கைவிடுவது ஆரோக்கியத்திற்கு நன்று வெற்றிலையை முறை தவறி உண்டால் பல்வேர் சிதையும், கண் புகைச்சல், பாண்டு (பாண்டு என்பது உடலில் நீர் கோர்திருக்கும் நோய், முழங்கால், கணுக்காலின் பின்புறம் வயிற்றின் கீழ்ப்புறம் போன்ற இடங்களில் நீர் சேர்த்து பலூனில் நீரை விட்டால் இருப்பது போல தெரிவது மற்றும் பல நோய்கள் உண்டாகும். இதற்கு மாற்று மருந்து இல்லை எனவே வாய்ப் புற்று நோயும் அதனால் ஏற்படும் உபத்திரவங்களான பாண்டு, உடற் பலவீனம், பற்கள் விழுதல் என்பன பற்றி சித்த மருத்துவ நூல்கள் எச்சரித்துள்ளன.

### மருத்துவ பயன்

அரை டம்ளர் அளவு தேங்காய் எண்ணெயை ஒரு சிறிய சட்டியில் விட்டு 5 வெற்றிலைகளைக் கிள்ளிப் போட்டு அடுப்பில் ஏற்றி இலைமுழுவதும் சிவ க்கும் வரை காய வைத்து இறக்கி அதை சீசாவில் விட்டு வைத்து பற்று, படை, சொறி இறக்கி சிரங்கு ஆகியவை பாதித்த இடத்தை சுத்தம் செய்து காலையும், மாலையும் இந்த எண்ணெய்யை தடவி வந்தால் குணமாகும்.

தலைவலி நீங்க வெற்றிலையைக் கசக்கி சாறு எடுத்து அந்தச் சாற்றில் சிறிதளவு எடுத்து அதில் சிறிதளவு கர்ப்பூரத்தைச் சேர்த்து குழப்பி வலியுள்ள இடத்தில் தடவினால் தலைவலி உடனே குணமாகும். வெற்றிலையை தேவையானளவு எடுத்து அதன் மேல் வேப்பெண்ணெய்யைத் தடவி தனலில் வாட்டி வீக்கமுள்ள இடத்தில் வைத்துக் கட்டினால் வீக்கம் வாடும்.

இரண்டு வெற்றிலையை எடுத்து அதில் ஒன்பது மிளகை மடித்து வாயில் போட்டு நன்றாக மென்று விழுங்கினால் தேள்விடம் நீங்கும்.

வெற்றிலைச்சாறு ஒரு டம்ளர், குப்பைமேனிச்சாறு ஒரு டம்ளர், நொச்சியிலைச்சாறு ஒரு டம்ளர், 2 டம்ளர் வேப்பெண்ணெய், மிளகு, வேர்க்கொம்பு, வாய் விடங்கம் ஒவ்வொன்றும் 50 கிராம் வீதம் எடுத்துப் போட்டு அடுப்பில் எடுத்து வைத்து, சாறு எண்ணெய், இலைகள் எல்லாம் ஒன்றாகச் சேர்த்து நன்றாக காய்ச்சி மருந்து சிவந்து வரும் சமயம் கீழே இறக்கி வைத்து ஆறிய பின் எண்ணெய்யை மட்டும் வடித்து ஒரு சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு வாரா வாரம் தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் பீனிசம், மண்டைக்குத்து குணமாகும்.

வெற்றிலையைத் தேவையான அளவு எடுத்து அதன் மேல் சிற்றாமணக் கெண்ணையைத் தடவி தணலில் வாட்டி வயிற்றிற்கு மேல் கனமாக ஒட்டி வைத்தால் குழந்தைகளின் வயிற்று உப்புசம் அடங்கும்.

வெற்றிலையையும் துளசி இலையையும் சம அளவு எடுத்து கசக்கிப் பிளிந்து சாறு எடுத்து தேக்கரண்டி அளவு சாற்றில் அரைத் தேக்கரண்டி அளவு தேன் சேர்த்துக் கலந்து உள்ளுக்குள் கொடுத்தால் குழந்தைகளின் உப்புசமும் சளியும் தீரும்.

வெற்றிலையை நைத்துச் சாறு எடுத்து 10 துணியளவு ஒரு சங்கு நிறைய வெந்நீர் விட்டுக் கலக்கி குழந்தைகளுக்கு உள்ளுக்கு கொடுத்து வந்தால் குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல் குணமாகும். வெற்றிலையை. தணலில் வாட்டி மார்பின்மேல் வைத்துக் கட்டி வந்தால் தாய்ப்பால் நன்கு சுரக்கும்.

முற்றிய வெற்றிலையை வைத்து சாறு எடுத்து 60 மில்லி சாற்றுடன் 3 மிளகு அதேயளவு சுக்கு இலைகளையும் தேக்கரண்டி தேனையும் சேர்த்துக் கொடுத்தால் ஆஸ்துமா தணியும்.

வெற்றிலையைத் தட்டிச்சாறு எடுத்து அதில் 3 தேக்கரண்டி இஞ்சிச்சாறு 3 தேக்கரண்டியளவும் சேர்த்து ஒரு பாத்திரத்தில் விட்டு வைத்தால் அது தெளியும். அடியில் சுண்ணாம்பு நீர் தேங்கியிருக்கும் சாற்றை மட்டும் இறுத்துக் கொடுக்க வேண்டும். காலை, மாலையாக இரு வேளை கொடுத்து வந்தால் நெஞ்சுச்சளி; தடிமன் குணமாகும்.

பேய்மிரட்டியிலை (கிலுகிலுப்பை), வெற்றிலை, நல்வேளை இலைகள் ஒவ்வொன்றும் கைப்பிடியளவு எடுத்து அம்மியில் 3 தேக்கரண்டியளவு ஓமம் சேர்த்து நன்றாக வைத்து கசக்கி பிழிந்து சாறு எடுத்து நுணியில் வடிகட்டி வசம்பைச் சுட்டு உரைத்து 130 மில்லி கிராம் அளவும் பெருங்காயத்தை சுட்டு 130 மில்லி கிராம் அளவும் சேர்த்து காலை,பகல், மாலை ஆக 3 வேளை 5.10 மில்லி அளவு கொடுக்க குழந்தை களுக்கு ஏற்படும் மந்த ரோகம் தீரும்.

வெற்றிலைச்சாறு 10 மில்லி அளவு காய்ச்சிய பசும்பால் ஒரு டம்ளரில் கலந்து சிறிதளவு சீனியும் சேர்த்து அருந்த சிறுநீர் நன்கு வெளிப்படும்.

வெற்றிலைச்சாறு ஒரு தேக்கரண்டி,தேன் ஒரு தேக்கரண்டியுடன் கலந்து அருந்த உடற் பலத்தை உண்டாக்கும். இவ்வாறு இரு நாட்கள் ஒரு தடவை 40 நாட்களுக்கு எடுக்கலாம்.

வெற்றிலையுடன் புகையிலை சேர்த்து மென்று வரும் பழக்கத்தால் நோய்கள் பல உண்டாகலாம் .அக் கெடுதியானது புகையிலையால் தான் ஏற்படும் .எனவே மருத்துவரின் ஆலோசனைப் படி வெற்றிலையைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் .

பல பருவ படர் கொடி ஆண்.பெண் தாவரங்கள் தண்டு தடிப்பானது.வேற்றிட வேர்கள் மூலம் தொற்றிப் படர்வது இலைகள் 10-20 சென்ரிமீற்றர் நீளமுடையவை .அகன்ற முட்டை வடிவானது .சற்றே இருதய வடிவானது .நுனி நீண்டது ஒளிரும் பச்சை நிறமுடையது.இலைக்காம்ப தடித்தது. 2-2.5 சென்ரி மீற்றர் நீளமானது.ஆண் மஞ்சரி அடர்ந்தது.பெண் மஞ்சரி நீளமானது.தொங்குவது கனிகள் அரிதாக உருவாகுகின்றன.பல வகைகள்விபரிக்கப்பட்டுள்ளது.

தொண்டையடைப்பு , குரற்கம்மலில் வெற்றிலையும் சாம்பிராணிப் பதங்கத்தையும் மென்று சுவைக்கும் படிசெய்யலாம். பால் சுரக்கவும் பால் கட்டி உண்டாகும் முலைவீக்கத்தைக் கரைக்கவும் வெற்றிலையைத் தணலில் வாட்டி அடுக்கடுக்காக வைத்துக்கட்டலாம் .

தலை பருவுக்கு மூக்கிலும் காது குத்தலுக்குக் காதிலும் வெற்றிலைச் சாற்றில் 2-3 துளி விடலாம் .வெற்றிலைச் சாற்றுடன் இஞ்சிச் சாறும் சேர்த்து நுரையீரல் சம்பந்தமான நோய்க்கு வழங்கலாம். தீப்பட்ட புண்ணின் மீது வெற்றிலையை வைத்துகட்டலாம்.

வெற்றிலையை எண்ணெயில் நனைத்து விளக்கில் வாட்டி மார்பின் மேல் போட இருமல்..மூச்சு முட்டல் கடின சுவாசம்,குழந்தைகளுக்கு உண்டாகும் இருமல் விலகும். இவைகளுக்கே வெற்றிலைச் சாற்றுடன் சுண்ணாம்பு கூட்டி தொண்டைக் குழியில் தடவலாம்.

" ஐய மனுங்காண தன் சாரங் கொண்டக்காற்
பையற் சமிந்ரயம் போம் பைந் கொடியே-மெய்யிற்
கடியின் குணம் போகுங் கார வெற்றிலைக்குப் படியுமுத் தோடத்தைப் பார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதம்**
**தொட்டதெல்லாம் வெற்றி**

சகோதர, தைரியகாரகனான செவ்வாயின் நட்சத்திரத்தில் பிறந்திருந்தாலும் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு மனக்காரகனான சந்திரன் இராசி நாதனாகவும் 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு வித்யாகாரகனான புதன் இராசிநாதனாகவும் உள்ளனர். உங்கள் நட்சத்திர நாதனுக்கு சனி பகைவர் என்றாலும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை கர்ம வினைக்கேற்ப வழங்கிடக் கூடியவராகிறார்.

3,4 ஆம் பாதத்தினருக்கு பாக்கிய ஸ்தானத்திலும் சஞ்சரிக்கிறார். இதனால் 3,4ஆம் பாதங்க ளில் பிறந்தவர்களுக்கு அனைத்திலும் யோகத்தை அளிப்பார். செல்வாக்கை அதிகரிப்பார். எதிர்பார்த்த அனுகூலங்களை உண்டாக்குவார். உத்தியோகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு அடைய வைப்பார். சங்கடங்களிலிருந்து முழுமையாக உங்களை விடுபட வைத்து முன்னே ற்றம் அடைய வைப்பார். சமூகத்தில் உங் கள் நிலையை உயர வைப்பார். தொட்ட தெல்லாம் வெற்றியென்ற நிலை உருவாகும்.

**அதிர்ஷ்ட காலம்**

சதயம் நட்சத்திரத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16.2024 - ஜுன் 19. 2024 வரையிலும் நவ 4.2024 - பெப் 27. 2025 வரையிலும் 4 பாதங்களில் பிறந்தவர்களுக்கும் அதிர்ஷ்டப் பலன்களை அள்ளி வழங்குவார். யோகத்தையும் போகத்தையும் அதிகரிப்பார். தொழில், உத்தியோகத்தில் முன்னேற்றம் தருவார். வருவாயை அதிகரிப்பார்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் 3,4ஆம் பாதங்களில் பிறந்த வர்களுக்கு தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். துணிச்சலாக செயற்பட்டு இழந்த சொத்து, செல்வாக்கை அடையும் நிலை உண்டாகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30. 2024 வரை 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்க ளுக்கு லாப ஸ்தானத்திலும் மே 1. 2024 - மே 13. 2025 வரை 1,2ஆம்பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஜென்ம குருவாகவும் 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு விரய குருவாகவும் மே 14. 2025 முதல் 1,2 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு தன குருவாகவும் 3,4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஜென்ம குருவாகவும் சஞ்சரிப்பார். 3,4ஆம் பாதத்தினருக்கு ஏப் 30.2024 வரை அதிர்ஷ்ட வாய்ப்புகளை உண்டாக்குவார். வியாபாரம், தொழில், உத்தியோகம், குடும்பம் என எல்லாவற் றிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவார்.

**தொழில்**

மிருகசீரிடம் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு லாப ராகுவாலும் 3,4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு பாக்கிய சனியாலும் உத்தியோகத்தர்களுக்கு புதிய பொறுப்பும் விரும்பிய இடத்திற்கு இட மாற்றமும் உண்டாகும். தனியார் நிறுவனத்தில் பணிபுரிவோரின் விருப் பம் நிறைவேறும். வெளிநாட்டு முயற்சி வெற்றியாகும். தொழிற்சாலை, ஸ்பர பார்ட்ஸ், ஆசிரியர்கள், கலைஞர்கள், மருத்துவர்கள், ரியல்எஸ்டேட், பில்டர்ஸ், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய் வோர் வளர்ச்சி அடைவார்கள்.

**பணியாளர்கள்**

உழைப்பு அதிகரிக்கும் என்றாலும் அதற்கேற்ற பலன்களை அடைவீர்கள். எதிர்பார்த்த ஊதிய உயர்வுடன் பொறுபபும் அதிகரிக்கும். மேலதிகாரிகள், முதலாளிகள் ஆதரவு கிடைக்கும்.

**கல்வி**

பொதுத்தேர்வில் பங்கேற்போர் ஆசிரியர்களின் ஆலோசனைப்படி செயற்படுவது அவசியம். விளையாட்டு போக்கை கைவிட்டு படிப்பில் கவனம் செலுத்துவதால் எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெற முடியும். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறும் யோகம் உண்டு.

**உடல்நிலை**

உடல்நிலையில் இருந்த சங்கடங்கள் விலகும். விபத்தால் நீண்டநாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்தவர்களின் உடல் நிலையில் முன்னேற்றம் தோன்றும். பரம்பரை நோய், தொற்றுநோயில் இருந்து விடுதலை பெறுவீர்கள்.

**குடும்பம்**

வருமானம் அதிகரிக்கும் என்பதால் குடும்பத்தில் இருந்த நெருக்கடி விலக ஆரம்பிக்கும். உறவினர்களுடன் ஒற்றுமை உண்டாகும். சொத்து சேர்க்கை ஏற்படும். பழைய கடன் அடைபடும். நினைத்ததை முடித்து ஆதாயம் அடைவீர்கள். காரியத்தடை நீங்கும். தொட்டது பொன்னாகும். சிலருக்கு புதிய வீடு, வாகனம் அமையும்.

**பரிகாரம்**

துர்க்கை, விநாயகர் வழிபாடு உங்கள் வாழ்வை வளமாக்கும்.

**திருவாதிரை யோகமான காலம்**

வித்யாகாரகன் என போற்றப்படும் புதன் மற்றும் போககாரகனான ராகுவின் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு டிசெ.20. 2023 முதல் பாக்கிய ஸ்தானத்தில் ஆட்சியாக சஞ்சரிக்கப் போகிறார் சனி பகவான்.

உங்கள் இராசிநாதன் புதனுக்கு சனி நட்பிற்குரியவர் என்றாலும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை வழங்கிடக் கூடியவரான சனி 9ஆம் வீடான பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் தொழிலில் முன்னேற்றம் தோன்றும். பணவரவில் இருந்த தடைகள் விலகும். உத்தியோகம், தொழிலில் இருந்த நெருக்கடிகள் நீங்கும். அரசியலில் மதிப்பு உயரும். ஆன்மிக சேவைக்கு நிதியுதவி செய்வதுடன் அதில் பங்கேற்கவும் செய்வீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் விலகும். வேலை தேடும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். வெளிநாடு செல்லும் விருப்பம் நிறைவேறும். சிலர் தங்கள் ரசனைக் கேற்ப புதிய வீடு கட்டி குடியேறுவீர்கள். களவு போன பொருட்கள் கிடைக்கும். செல்வாக்கு உயரும். எதிர்ப்பார்த்த வருமானம் உண்டாகும். இக்காலம் உங்களுக்கு யோகமான காலமாக இருக்கும்.

**அதிர்ஷ்ட காலம்**

அவிட்டம் நட்சத்திரத்தில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலமான டிசெ.20.2023 - பெப் 15.2024 வரையிலும் பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29. 2025 - ஜுலை 2.2025 வரையிலும் நவ 17.2025 - மார்ச் 6. 2026 வரையிலும் தொழிலில் இருந்த தடைகள் அகலும். பணவரவு அதிகரிக்கும். பகைவர் தொல்லை மறையும். உறவினர், நண்பர்களிடம் ஏற்பட்ட மனக்கசப்பு நீங்கும். தந்தையின் உடல்நிலை சீராகும். சிலர் தந்தையின் தொழிலை மேற்கொண்டு லாபம் காண்பர்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் வேலைப்பளு அதிகரிக்கும். குழப்பம் மேலோங்கும். தொழில், உத்தியோகத்தில் நெருக்கடி தோன்றும். உடல் நிலையிலும் வசதி வாய்ப்பிலும் பின்னடைவு ஏற்படும். உழைப்பு அதிகரிக்கும்.

ஏப் 26.2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் முன்னேற்றம் உண்டாகும். கேட்ட இடத்திலிருந்து உதவி தேடி வரும். தொழிலில் முயற்சியும் ஆர்வமும் அதிகரிக்கும். மறைமுகத் தொல்லைகள் நீங்கும். வணிகத்தில் இருந்த தடைகள் விலகி முன்னேற்றம் ஏற்படும். புதிய தொழில் தொடங்கும் நிலை சிலருக்கு ஏற்படும். வேலை இல்லாதவர்களுக்கு தகுந்த வேலை அமையும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் வாழ்வு வளமடையும். சுபநிகழ்ச்சி நடந்தேறும். வருமானம் அதிகரிக்கும். அந்தஸ்து உயரும். மே 1. 2024 - மே 13.2025 காலத்தில் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும் உடல்நிலையில் சங்கடம் விலகும். மனதில் இருந்த பயம் விலகும். அனைவராலும் மதிக்கப்படுவீர்கள். எதிர்பார்த்த சந்தோஷத்தை அடைவீர்கள். மே 14. 2025 முதல் ஜென்ம ராசிக்குள் சஞ்சரிக்கும் குருவால் எண்ணங்கள் நிறைவேறும். திருமண வயதினருக்கு வரன் தேடிவரும். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். உயர்கல்வி எண்ணம் நிறைவேறும். இறையருளும் தந்தையின் வழிகாட்டுதலும் உங்களை உயர்த்தும்.

**பொதுப்பலன்**

சனி பகவான் உங்கள் பாக்கியாதிபதி என்பதால் மேற்கொள்ளும் முயற்சி யாவும் வெற்றியாகும். செயல்கள் திட்டமிட்டபடி நடந்தேறும். வம்பு வழக்குகள் சாதகமாகும். எதிர்பார்த்த வருமானம் உண்டாகும். சொத்து சேர்க்கை ஏற்படும். நவீன உபகரணம், புதிய வாகனம் வாங்கும் நிலை ஏற்படும்.

**தொழில்**

தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். சிலர் புதிய தொழில் தொடங்குவர். விவசாயத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். வாகனம், இயந்திரம், பதிப்பகம், தொலைக்காட்சி, சினிமா, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் வளர்ச்சி பெறும்.

**பணியாளர்கள்**

பணிபுரியும் இடத்தில் ஏற்பட்ட சங்கடங்கள் குறையும். ஊதிய உயர்வு, பதவி உயர்வு என எதிர்பார்ப்புகள் நிறைவேறும். அரசுப் பணியாளர்கள் மேலதிகாரியின் பாராட்டிற்கு ஆளாவதுடன் விரும்பிய இடமாற்றத்தை அடைவீர்கள். புதிய பொறுப்பு உண்டாகும்.




## 20.12.2023-06.03.2026

**கல்வி**

பொதுத்தேர்வு, போட்டித் தேர்வுகளில் பங்கேற்போர் படிப்பில் அக்கறை செலுத்தினால் மட்டுமே எதிர்பார்த்த மதிப்பெண்ணை பெற முடியும். ஆசிரியர்களின் ஆலோசனைகளை ஏற்பதால் உங்கள் கனவு நிறைவேறும். விரும்பிய கல்லூரியில் மேற்கல்விக்கு இடம் கிடைக்கும்.

**உடல்நிலை**

முன்பிருந்த பாதிப்புகள் விலகும். ஆரோக்கியம் அதிகரிக்கும். இனம்புரியாத நோய்களால் அவதிப்பட்ட நிலை மாறும். சிகிச்சையால் குணம் பெறுவதுடன் சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள்.

**குடும்பம்**

எதிர்பார்த்த வருமானத்தால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய இடம் வாங்குவது, வீடு கட்டுவது, தொழில் தொடங்குவது என பலவித முன்னேற்றம் தோன்றும். வீட்டிற்குத் தேவையான நவீன பொருட்களை வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்தில் இருந்த பிரச்சினைகள் விலகி சொத்து உங்கள் கைக்கு வந்து சேரும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும். வேலைவாய்ப்பிற்காக காத்திருந்தவர்களின் எண்ணம் நிறைவேறும்.

**புனர்பூசம் 1,2,3 ஆம் பாதம்**

தன, புத்திர, ஞானகாரகனான குருவின் நட்சத்திரத்தில் பிறந்திருந்தாலும் முதல் 3 பாதங்களில் பிறந்தவர்களுக்கு புதன் இராசிநாதனாகவும் 4ஆம் பாதத்தினருக்கு சந்திரன் இராசி நாதனாகவும் உள்ளனர். உங்கள் நட்சத்திர நாதனுக்கு சனி நட்பானவர் என்றாலும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை அவரவர் கர்ம வினைக்கேற்ப வழங்கக் கூடியவராகிறார்.

புனர்பூசம் 1,2,3ஆம் பாதத்தினருக்கு சனி பாக்கிய ஸ்தானத்திலும் 4ஆம் பாதத்தினருக்கு அஷ்டம ஸ்தானத்திலும் சஞ்சரிக்கிறார். இதனால் 1,2,3ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு சனி 9ஆம் வீட்டிற்குரிய நற்பலன்களை வழங்குவார். இதுவரை இருந்த பாதிப்புகள் எல்லாம் விலகும். விரும்பிய யாவும் இனி கைக்கு வந்து சேரும். உங்கள் தகுதிக்கேற்ற பொறுப்புகள், பணியில் பதவி உயர்வு போன்றவை ஏற்படும். மற்றவர்களால் முடியாதவற்றை எல்லாம் முடித்துக்காட்டும் வல்லமை உண்டாகும். தெய்வ சிந்தனை மேலோங்கும். ஆன்மிகப் பயணம் மேற்கொள்வீர்கள்.

**அதிர்ஷ்ட காலம்**

அவிட்டம் நட்சத்திரத்தில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலமான டிசெ 20.2023 - பெப் 15.2024 வரையிலும் சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16.2024 - ஜுன் 19. 2024 மற்றும் நவ 4.2024 - பெப் 27.2025 வரையிலும் 4 பாதங்களில் பிறந்தவர்களுக்கும் அதிர்ஷ்டப் பலன்களை வழங்குவார். தொட்டதெல்லாம் வெற்றி. முயற்சியில் லாபம் உண்டாகும். விருப்பங்கள் நிறைவேறும். 4 ஆம் பாதத்தினருக்கு அஸ்தமனம், வக்கிரம காலங்களில் நெருக்கடிகளில் இருந்து பாதுகாப்பார். வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவார்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26. 2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் 1,2,3ஆம் பாதத்தினருக்கு விருப்பங்கள் நிறைவேறும். துணிச்சலுடன் செயற்பட்டு முயற்சிகளில் லாபம் காண்பீர்கள். சகோதரர்கள், பணியாளர்கள் ஒத்துழைப்புடன் வெற்றி காண்பீர்கள்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30. 2024 வரை 1,2,3ஆம் பாதத்தினருக்கு லாப ஸ்தானத்திலும் 4 ஆம் பாதத்தினருக்கு ஜீவன ஸ்தானத்திலும் மே 1. 2024 - மே 13. 2025 வரை 1,2,3ஆம் பாதத்தினருக்கு விரயஸ்தானத்திலும் மே 14. 2025 முதல் 1,2,3ஆம் பாதத்தினருக்கு ஜென்ம ராசியிலும் குருபகவான் சஞ்சரிக்கிறார். 1,2,3ஆம் பாதத்தினருக்கு ஏப் 30.2024 வரை பணவரவை அதிகரிப்பார். செல்வாக்கை உயர்த்துவார். முயற்சிகளை எல்லாம் வெற்றியாக்குவார். மே 13. 2025 முதல் 1,2,3 ஆம் பாதத்தினருக்கு தன் பார்வை மூலம் குடும்பத்தில் சுபீட்சத்தையும் நட்புகளால் நன்மைகளையும் திருமண வயதினருக்கு திருமண யோகத்தை உண்டாக்குவார்.

**பொதுப்பலன்**

இந்த சனிப் பெயர்ச்சியால் இதுவரை இருந்த நெருக்கடி நீங்கும். முயற்சிகள் வெற்றியாகும். கடன்களால் ஏற்பட்ட அவமானம் மறையும். வியாபாரம், தொழிலில் லாபம் அதிகரிக்கும். பொருளா தார நிலை உயரும். அரசு ஊழியர்களின் செல்வாக்கு உயரும். செயல்கள் வெற்றியாகும். துணிச்சலுடன் செயற்பட்டு இலக்கை அடைவீர்கள்.

**தொழில்**

மருத்துவம், கல்வி, ஏற்றுமதி, இறக்குமதி, சினிமா, சின்னத்திரை, இயந்திரத் தொழிற்சாலைகள், வியாபார நிறுவனங்கள், எலக்ட்ரிக்கல், கம்யூட்டர் தொழில்கள் வளர்ச்சி பெறும். எதிர்பார்த்த லாபம் உண்டாகும். தொழிலில் அபரிமிதமான முன்னேற்றம்பெறும் காலமாக அமையும்.

**பணியாளர்கள்**

திறமைக்கு மதிப்பில்லை, என்ன தான் உழைத்தாலும் உயர்வில்லை என்று வருத்தப்பட்ட நிலை மாறும். இனி உங்கள் உழைப்பிற்கு மதிப்புண்டாகும். சிலருக்கு புதிய பொறுப்புகள் ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். கலைஞர்கள், ஆன்மிகப் பேச்சாளர்கள், கல்வியாளர்களின் நிலை உயரும்.

**கல்வி**

கல்வியில் அக்கறை கொண்ட உங்களுக்கு இக்காலத்தில் ஆசிரியர்களின் ஆலோசனை நன்மை தரும். உயர்கல்வி கனவு நிறைவேறும். போட்டித் தேர்வில் பங்கேற்பவர்கள் மற்ற சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காமல் செயற்பட்டால் வெற்றி நிச்சயம்.

**உடல்நிலை**

இதற்கு முன்பிருந்த பாதிப்பு விலகும். விபத்து, பக்கவாதம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை காரணமாக எழுந்து நடமாடத் தொடங்குவர். சிலருக்கு மூச்சுத் திணறல், நரம்பு பிரச்சினை ஏற்பட்டு சரியாகும்.

**குடும்பம்**

குடும்பத்தின் மீதான அக்கறை அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு திட்டமிடுவீர்கள். புதிய வாகனம், வீடு என நீண்டநாள் கனவு நிறைவேறும். தந்தையின் ஆதரவு அதிகரிக்கும். தம்பதிகள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். உறவினர் வருகை அதிகரிக்கும். உறவினர் மத்தியில் செல்வாக்கு உயரும்.

பரிகாரம் நரசிம்மரை வணங்க வாழ்வு செழிக்கும். சங்கடங்கள் விலகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கல்கியின்** பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 362



என்னை நகத்தினால் பிறாண்டவில்லை. உம்மை மட்டும் தாக்கிப் பிறாண்டியது! அதற்குக் காரணம் என்ன? வைஷ்ணவர்களைக் கண்டால் பிடிக்காத வீர சைவப் பூனை அது!

"ஓகோ! அப்படியோ? இந்த யோசனை எனக்குத் தோன்றாமல் போயிற்றே? வீர சைவப் பூனை என்று தெரிந்திருந்தால் தடியினால் நாலு திருச்சாத்துச் சாத்தியிருப்பேனே?"

"உம் கையில் தடி இல்லாததே நல்லது. ஏனென்றால், இந்த ஷேத்திரத்துக்கு வந்ததிலிருந்து என் உடம்பிலே கூட வீர சைவ இரத்தம் கொதிக்கத் தொடங்கியிருக்கிறது. என் உறையிலுள்ள கத்தி 'வீர வைஷ்ணவ இரத்தம் வேண்டும்' என்று அழுகிறது. நீர் எனக்குச் செய்த பேருதவியை நினைத்து அதை அடக்கி வைத்திருக்கிறேன்!"

"அப்பனே! உனக்கு நான் ஓர் உதவியும் செய்யவில்லையே!"

"வைஷ்ணவரே! தங்கள் சகோதரியாகிய பழுவூர் இளைய ராணியைப் பற்றி எனக்கு நீர் சொல்லவில்லையா?"

"ஆமாம் சொன்னேன்."

"பழுவூர் இளையராணி கடம்பூருக்கு அருகில் மூடு பல்லக்கில் போனபோது, திரை விலகியதே, அப்போது அந்தத் தேவியை நீர் எனக்குச் சுட்டிக் காட்டவில்லையா?"

"ஆம் ஆம் அதனால் என்ன?"

"சொல்லுகிறேன், அதே பல்லக்கு தஞ்சைக் கோட்டைக்கருகில் சென்று கொண்டிருந்தபோது நான் பார்த்தேன். பல்லக்கு சுமப்பவர்கள் வேண்டுமென்று வந்து என் குதிரையின் மேல் இடித்தார்கள். நான் நியாயம் கோருவதற்காகப் பல்லக்கின் திரையை விலக்கிப் பார்த்தேன்."

"உள்ளே இருந்தது யார்?"

"பழுவூர் இளையராணி சாக்ஷாத் நந்தினி தேவிதான்!"

"ஓஹோ! நீ அதிர்ஷ்டசாலி. நான் ஆனமட்டும் முயன்றும் நந்தினியைப் பார்க்க முடியவில்லை. உனக்கு அது கைகூடிவிட்டதே!"

"அதிர்ஷ்டம் வரும்போது அப்படித்தான் தானாகவே வரும்!"

"அப்புறம்?"

"நான் தங்கள் பெயரைச் சொன்னேன். தேவிக்கு முக்கியமான செய்தி தாங்கள் சொல்லி அனுப்பியதாகக் கூறினேன்."

"நானும் பார்த்தாலும் பார்த்தேன். உன்னைப் போல் கூசாமல் பொய் சொல்லுகிறவனை இந்தப் பிரபஞ்சத்தில் எங்கும் பார்த்ததே கிடையாது."

"வைஷ்ணவரே! என் மூதாதைகளுக்குக் கவிஞர்களின் பேரில் மிக்க பிரியம். அவர்களே கவிதைகளும் பாடியிருக்கிறார்கள்."

"அதனால் என்ன?"

"கவி பரம்பரை இரத்தம் என் உடம்பிலும் ஓடுகிறது. அதனால் சில சமயம் கற்பனை பொங்கி வருகிறது. உம்மைப் போன்ற பாமரர்கள் அதைப் பொய் என்று சொல்லுவார்கள்"

"நல்லது அப்புறம் என்ன நடந்தது?"

"என் கற்பனையைக் கேட்டு வியந்து நந்தினிதேவி பழுவூர் முத்திரை மோதிரத்தைக் கொடுத்தார். அரண்மனையில் வந்து பார்க்கச் சொன்னார்."

"போய்ப் பார்த்தாயா?"

"பின்னே, பார்க்காமலிருப்பேனா? உடனே போய்ப் பார்த்தேன். என் வீரதீர பராக்கிரமங்களைப் பற்றி நானே சொல்லித் தெரிந்து கொண்ட நந்தினிதேவி, எனக்கு ஒரு முக்கியமான வேலை கொடுத்தார்."

"அது என்ன வேலை?"

"இந்த இலங்கையில் மதுரை பாண்டிய வம்சத்து மணிமகுடமும் இந்திரமாலையும் இருக்கின்றனவாம்.

இலங்கை அரச குடும்பத்தார் மலைநாட்டில் ஒளித்து வைத்திருக்கிறார்களாம்.

'அந்த, நகைகளை எப்படியாவது தேடிக் கொண்டு வந்துவிடு!' என்று சொல்லி அனுப்பினார். அது இவ்வளவு கஷ்டமான வேலை என்று எனக்குத் தெரியாமல் போயிற்று."

(தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## அறிவுப் பானை

(தொடர்ச்சி..)

அப்படியே விட்டு வைத்தால் காய் இன்னும் பெரிதாக வளர்ந்து பானையை உடைத்து விடும் என்ற நிலை வந்த போது, பீர்பால் பானைக்குள் சென்று, வெளியே வந்த கொடியின் பாகங்களைக் கத்தியால் அறுத்து விட்டார். இப்போது பானைக்குள் நன்கு வளர்ந்த பறங்கிக்காய் மட்டுமே இருந்தது. பானையின் வாயினை துணியினால் இறுக மூடி அடைத்த பீர்பால் பின்னர், அதை தர்பாருக்கு எடுத்துச் சென்றார்.

அக்பரிடம் பானையை அளித்த பீர்பால், "பிரபு இதுதான் மன்னர் வீரசிம்மன் விரும்பிய அறிவுப்பானை! இதை அவரிடம் அனுப்பி வையுங்கள்" என்றார். அதைக் கண்ட அக்பர், "என்ன, பீர்பால்! விளையாடுகிறாயா? பானையில்



எப்படி அறிவை நிரப்ப முடியும்? இதற்குள் உண்மையில் என்ன இருக்கிறது?" என்று ஆர்வத்துடன் அக்பர் கேட்டார்.

"பிரபு, அறிவுப்பானைக்குள் அறிவுதான் இருக்கும். வீரசிம்மன் பானைக்குள் இருக்கும் அறிவை எடுத்துக் கொண்டு, பானையை திருப்பி நமக்கு அனுப்பி விட வேண்டும். அதை வெளியில் எடுக்கும் போது அது நசுங்கக் கூடாது. பானையும் உடையக் கூ[illegible] ஒருக்கால் பானை உடைந்து போனால், வீரசிம்மன் பத்தாயிரம் பொற்காசு அபராதம் செலுத்த வேண்டும். இவை அனைத்தையும் அவருக்குத் தெரிவித்து விடுங்கள்" என்றார் பீர்பால்.

"என்ன? அபராதம் பத்தாயிரம் பொற்காசுகளா?" என்று அக்பர் கேட்டார்.

"அறிவின் விலை மிகவும் அதிகம் பிரபு" என்றார் பீர்பால். [illegible] தூதன் மூலம் கொடுத்தனுப்பியபின், ஆர்வத்தை அடக்க முடியாத அக்பர், "பீர்பால்! பானைக்குள் என்னதான் வைத்திருக்கிறாய் என்று எனக்கு கூறு" என அவசரப்படுத்தினார்.

உடனே பீர்பால் தான் செய்ததைச் சொன்னார். "பிரபு, வீரசிம்மன் தனது குறும்புத்தனமான கேள்விக்கு சரியாக மூக்குடைப்படுவார். பானைக்குள் இருக்கும் பரங்கிக்காயை அவரால் பானையை உடைக்காமல் முழுதாக வெளியே எடுக்க முடியாது. பரங்கிக்காயை அறுத்து வெளியே எடுப்பதும் கூடாது. அதனால் அவர் நம்மிடம் வசமாக சிக்கிக் கொண்டார்.

"அடப்போக்கிரி!" என்று பீர்பால் முதுகில் செல்லமாகத் தட்டினார் அக்பர். பானையைப் பெற்ற வீரசிம்மன் பானையினுள் ஒரு பெரிய பரங்கிக்காய் இருப்பதைப் பார்த்தார்.

கூடவே அந்த இரண்டு நிபந்தனைகளையும் கேட்டார். பரங்கிக்காயை அறுக்கவும் கூடாது. அதே சமயம் முழுதாக வெளியே எடுக்க முயன்றால் பானை உடையும். உடனே அந்த அதிகப் பிரசங்கி இளைஞர்களை அழைத்த மன்னர், அறிவுப்பானையை அவர்களிடம் காட்டி விளக்க, அவர்கள் முகத்தில் அசடு வழிந்தது

"உங்கள் பேச்சைக் கேட்டு நானும் முட்டாள் ஆனேன். முன்னமே சொன்னேன், அக்பரின் சபையில் அறிஞர்களுக்குப் பஞ்சமில்லை என்று. என் பேச்சை நீங்கள் கேட்கவில்லை. அபராதத் தொகையை ஈடுகட்ட, நீங்கள் காலம் முழுவதும் என்னிடம் சம்பளமின்றி உழைக்க வேண்டும்" என்றார்.

பிறகு தலைவிதியை நொந்து கொண்டு, அபராதத் தொகையை அக்பருக்கு அனுப்ப, அவர் அதில் பாதியை பீர்பாலுக்கு வழங்கினார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.

– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிறப்பின் மகிமையை உணர்ந்து கொண்டால்...

இன்று இயேசு பாலகனின் பிறப்பு நாள். உலகம் முழுவதிலுமுள்ள கிறிஸ்தவ மக்கள் இயேசு பாலகனின் பிறப்பு நாளைக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் தேவாலயங்களில் வழிபாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் இதுவே மெய்ப்பொருள்.

ஆயினும் இறைவனை அடைவதற்கும் ஆன்மீக சுகத்தை அனுபவிப்பதற்கும் பற்பல சமயங்கள் தோன்றி இறை தத்துவங்களைச் செப்புகின்றன.

ஒரே கடவுள் என்றால், ஒரே சமயம் இருப்பதுதானே முறை என்று நாம் சிந்திக்கலாம்.

ஆனால் இங்குதான் இறைவனை வணங்குவதற்கும் இறை நம்பிக்கை நீடுவாழ்வதற்கும் சமயம் என்ற எல்லை மட்டுப்படாமல் விரிவுபட வேண்டிய தேவையுள்ளது.

அதன் காரணமாகவே வெவ்வேறு சமயங்கள் தோற்றம் பெற்று வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு நாமங்களில் வழிபாடுகள் நடக்கலாயிற்று.

இங்குதான் என் சமயம். என் கடவுள். என் வழிபாடு என்ற ஈடுபாடும் ஆர்வமும் ஏற்படுகிறது.

ஆனால் இவ்வுலகில் எத்தனை சமயங்கள் இருந்தாலும் அவை அத்தனையும் அன்பையும் நீதி நேர்மை என்ற உயர்ந்த அறத்தையும் மனிதநேயத்தையும் வலியுறுத்துவதை நாம் கண்டு கொள்ள முடியும்.

ஆக, பல்வகைச் சமயங்கள் தோற்றம் பெற்றதன் நோக்கமெல்லாம் ஒரு சமயத்தை விஞ்சி மற்றைய சமயம் அன்பை, அறத்தைப் பேண, அது கண்டு மற்றைய சமயங்களும் அன்பு, கருணை, புண்ணியம் என்ற தர்மத்தைப் பின்பற்ற, எங்கும் அன்பும் அரவணைப்பும் பாசமும் மனிதநேயமும் மலிந்து எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழும்.

இந்த அடிப்படையிலேயே பல்வகைச் சமயங்கள் தோற்றம் பெற்றன.

ஆயினும் சமயங்கள் தத்தம் இலக்கைத் தவறவிட்டுப் பாதை மாறிப் பயணிப்பதை அவதானிக்க முடிகிறது.

அதிலும் குறிப்பாக சமயத் தத்துவங்களை மக்களுக்கு எடுத்துரைத்து மக்களை இறை நம்பிக்கையோடும் மற்றவர்களுக்குத் தீங்கில்லா வாழ்வை வாழ்வதற்கும் வழிப்படுத்துவதே சமயத் தலங்களின் பணியாகும்.

என்ன செய்வது மக்களை தெய்வீகத்தின் பாதையில் வழிப்படுத்த வேண்டிய மதகுருமாரே மதம் கொண்டு மற்றைய சமயங்களை நிந்திக்கும்போது, சமயங்களின் நோக்கம் பிழைத்துப் போவது தவிர்க்க முடியாததே.

எதுஎவ்வாறாயினும் இன்று நத்தார் பண்டிகை. இயேசு பாலகனின் பிறப்பு நாள்.

இயேசு பாலகனின் பிறப்பின் மகிமையை உணர்ந்து கொண்டால், அதுவொன்றுபோதும் இந்த உலகில் நாம் மனிதர்களாய்ப் பிறந்து புனிதர்களாக வாழ்வதற்கு.

ஆகையால் இயேசு பாலகனின் பிறப்பின் மகிமையை உள்ளத்தால் உணர்ந்து இயேசு பிரானை ஏற்றி போற்றித் தொழுவோம்.

# கட்சி என்னைத் தெரிவு செய்தால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன்

## மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு

(கொழும்பு)

கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தான் தயாராக உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடு வங்குரோத் தடைந்தமைக்கு யார் காரணம் என நீதிமன்றம் தெளிவான பெயர்ப் பட்டியலை வெளியிட்டுள்ளது. அவ்வாறிருகையில் அவர்களின் பின்னால் செல்வதா அல்லது நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லும் சுதந்திர கட்சியுடன் இணைந்து செயற்படுவதா? என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பொருத்தமான வேட்பாளரை சுதந்திர கட்சி தக்க சமயத்தில் களமிறக்கும். கட்சியின் நிறைவேற்றுக்குழுவே அந்த தீர்மானத்தை எடுக்கும். அதற்கமைய நிறைவேற்றுக்குழு என்னை வேட்பாளராகத் தெரிவு செய்தால், களமிறங்குவதற்கு நான் தயாராகவே உள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவிக்கையில், சுதந்திர கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களில் பெரும்பாலானோரின் நிலைப்பாடு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதாகவே காணப்படுகிறது என்றார். (ந-7.9)

# போதை வர்த்தகம், பாதாள உலகக்குழு 2024 ஜூனுக்குள் ஒழிக்கப்படும்

## அமைச்சர் டிரான் அலஸ் சபதம்

(கொழும்பு)

போதைப்பொருள் பயன்பாடு மற்றும் பாதாள உலகத்தினரின் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு எதிர்வரும் ஜூன் மாதத்துககுள் முழுமையாக முற்றுப்புள்ளி வைப்பதை இலக்காக கொண்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தச் சவாலான பயணத்தில் அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த ஐந்து நாட்களாக முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புக்கள் மற்றும் பாதாள உலக குழுவினருக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை ஆக்கிரமித்துள்ள போதைப்பொருள் வர்த்தகம், பாவனை மற்றும் பாதாள உலகக்குழுவினர் ஆகியோருக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸார் உள்ளிட்ட பொதுமக்கள் பாதுகாப்புத் துறையினர் 24 மணிநேரமும் விழிப்புடன் தீவிரமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் செயற்பாட்டிற்கு பொதுமக்கள் உட்பட அனைத்துப் தரப்பினரும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். அவ்வாறான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுவதன் மூலமாக போதைப்பொருளற்ற சமூகத்தைக் கொண்ட நாடொன்றை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. இந்தச் செயற்றிட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையான ஆதரவினை அளித்துள்ளார். அத்துடன், பாதுகாப்பு படையினரும் பாரியளவில் ஒத்துழைப்புக்களை வழங்குகின்றார்கள். விசேடமாக கடல் மார்க்கமாக நடைபெறும் போதைப்பொருள் கடத்தல்களை தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகளை கடற்படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் போதைப்பொருள் கடத்தல்கள், விநியோகம், பாவனை உள்ளிட்டவற்றுடன் தொடர்புடையவர்கள் மீதும் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடும் பாதாள உலகக்குழுவினர் மீதும் எந்தவிதமான தயவுமின்றி சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதில் எவ்வித மாற்றமில்லை என்றும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். (ந-7.9)

# நத்தார் வழிபாட்டின் போது விசேட பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

நத்தார் காலத்தில் தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதுமானதாக இல்லாவிட்டால் அது தொடர்பில் அறிவிக்க பொலிஸ் தலைமையகத்தில் இருந்து விசேட இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதன்படி 011 247 27 57 என்ற இலக்கத்தின் ஊடாக இது தொடர்பான தகவல்களை அறிவிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று இரவு 11.45 மணியளவில் நாட்டின் பிரதான ஆராதனை நிகழ்வு ஹால்பே புனித பிரான்சிஸ் சேவியர் தேவாலயத்தில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7.9)

# மியன்மார் பயங்கரவாதிகளிடம் சிக்கியுள்ள இலங்கையர்கள்

## மனித கடத்தல்காரர்கள் மூவர் அடையாளம்

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) மனித கடத்தல் மற்றும் கடல்சார் குற்றப்பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் மியான்மருக்கு இலங்கையர்களை கடத்துவதில் ஈடுபட்ட மூன்று பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அரலகங்வில, வதுரேகம மற்றும் தொரதியாவ பிரதேசங்களில் வசிப்பவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த மூவரும் அந்தந்தப் பிரதேசங்களை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக கூறப்படுகின்றது.

மியான்மரில் பயங்கரவாதிகளிடம் சிக்கியுள்ள இலங்கையர்களை வருகை விசா மூலம் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மியான்மார் பயங்கரவாத முகாமில் 56 இலங்கையர்கள் வலுக்கட்டாயமாகத் தடுத்து வைக்கப்பட்டு இணைய அடிமைகளாக வேலை செய்ய வைக்கப்படுவதாக அண்மையில் தகவல் வெளியானது.

முகாமில் இருந்து தப்பிய ஐந்து பேர் நாடு திரும்பியுள்ளனர்.

அவர்களில் மூவர் நேற்று (24) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் இவர்கள் மியான்மார் சென்றிருந்த நிலையில், அங்கு பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து தப்பித்து கடந்த நவம்பர் நான்காம் திகதி நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தாரின் நாயகர்கள்- செக்கரியா மற்றும் அன்னை மரியா

## ஒரு திறனாய்வு

உலகினைப் படைத்த கடவுள் நமக்காக நம்மைத் தேடி காசினிக்கு வந்தார். பைபிளில் உள்ள ஒரு புத்தகத்தின், ஆசிரியர் புனித லூக்கா தனது நற்செய்தியை இந்த இரண்டு நாயகர்களின் கதையுடன் ஆரம் பித்து வைக்கின்றார். குரு செக்கரியா மற்றும் இயேசுவின் தாயாக வர விருக்கும் அன்னை மரியா. "யூதேய நாட்டில் ஏரோது அரசனாக இருந்த காலத்தில் அபியா வகு ப்பைச் சேர்ந்த செக்கரியா என்னும் பெயர் கொண்ட குரு ஒருவர் இரு ந்தார்".

"ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா". (லூக்கா 1:5,26-27).

நத்தார் கதையில், இயேசுவுக்கு வழியை ஆயத்தம் செய்யவரும் திருமுழுக்கு யோவானின் தந் தையாக முக்கிய பங்கு வகித்தார் செக்கரியா. கடவுளின் தாயாக முக்கிய பங்கு வகிக்கின்றார் மரியா. இறைவனின் வார்த்தைகள் குறித்து சந்தேகம் அடைந்த செக்கரியா, மற்றும் இறைவார்த்தையை முழுமையாக நம்பிய அன்னை மரியா என இருவருக்கும் இடையேயான வேறுபாடுகளை நோக்குவோம்:-

செக்கரியா வயதான ஒரு குரு. மரியா ஓர் இளம் கன்னிப் பெண். இருவரும் சமூகத்தில் நேர்மையானவர்கள், உயர்ந்தவர்கள். குறிப்பாக இதில் செக்கரியா அன்று முதன்மையானவர். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் பரிசுத்த தலத்தில் கடவுளுக்கு ஊழியம் செய்யும் ஓர் உன்னத குரு. மேலும் ஒரு சிலர் மட்டுமே காணும் பரிசுத்த நிகழ்வுகளைப் பார்த்த பாக்கியத்தை அடைந்த ஒரு குரு.

இந்த வேளையில் மெசியா வரு வார் என ஆவலுடன் இரண்டாயிரம் ஆண்டுகளாகக் காத்திருந்த தருணத்தில் வானதூதர் கபிரியேல் இந்த இரண்டு நாயகர்களிடம் கடவுளின் செய்தியுடன் வருகிறார். இருவரும் மிகவும் அச்சமும் கலக்கமும் அடைந்தனர். "அஞ்சாதீர்" என்று கடவுளின் தூதர் அவர்களைச் சமாதானப்படுத்துகிறார்.

செக்கரியாவிடம், வான தூதர் கபிரியேல்,"செக்கரியா, அஞ்சாதீர். உமது மன்றாட்டுக் கேட்கப்பட்டது. உம் வயதான மனைவி எலிசபெத்து உமக்கு ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு யோவான் எனப் பெயரிடுவீர். நீர் மகிழ்ந்து பேருவகை கொள்வீர். அவ்ரது பிறப்பால் பலரும் மகிழ்ச்சியடைவர். அவர் ஆண்டவர் பார்வையில் பெரியவராய் இருப்பார். அவர், இஸ்ரயேல்



மக்களுள் பலரைத் தம் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வரச் செய்வார்.

மரியாவிடம் வானதூதர் கபிரியேல், கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர் இதோ. கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார். உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்.

இந்த இரண்டு நாயகர்களும் ஒரு முக்கியமான செய்தியைப் பெறுகின்றன, ஆனால் அவர்களின் பதில்கள் மாறுபடுகின்றன்:-

செக்கரியா வானதூதரிடம் கேள்வி எழுப்புகிறார்: "இது நடைபெறும் என எனக்கு எப்படித் தெரியும்? நான் வயதானவன். அது போல் என் மனைவியும் வயது முதிர்ந்தவராயிற்றே"என்றார். என் மனைவி குழந்தையைப் பெற்றடுக்கும் வல்லமை அற்றவள். நாங்கள் குழந்தைகளைப் பெறமுடியாத அளவுக்கு வயதாகிவிட்டோம். செக்கரியாவின் நம்பிக்கையின்மை வெளிப்படுவதை நாம் கூர்ந்து கவனிக்கலாம்.

மரியாவின் மறுமொழியை நோக்குவோம்: அதற்கு மரியா வானதூதரிடம், "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!" என்றார். இப்பதில் மேலோட்டமாகத் தெரிகிறது: "நான் கன்னியாக இருப்பதால் இது எப்படி இருக்கும்?" இருப்பினும் மரியாவின் வார்த்தைகளைக் கருத்தில் கொள்ளும்போது, அவை நம்பிக்கையின்மையை பிரதிபலிக்கவில்லை என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளமுடியும். அவர் விளக்கம் தேடுகிறார். மனித வழியால் அல்ல, பரிசுத்த ஆவியினால் இவை நிகழும் என்று வானதூதர் விளக்குகிறார். மேலும் உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுறஇய லாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம் என விளக்குகின்றார்.

இதைக் கேட்டதும் மரியாவன் பதில் ஆச்சரியமாக-அற்புதமாக இருக்கிறது. "நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார். மரியா தன்னை கடவுளுடைய சீடராகப் பார்க்கிறாள். இந்த வழியில் கடவுள் தன்னை பணிசெய்ய அழைக் கின்றார் என உணர்ந்து உட னடியாக அவர் தயாராகுகின்றார். மரியா 12 வயது மதிக்கத்தக்க ஒரு குழந்தை, உளவயது போதாத ஒரு சிறுமி. அவள் எப்படி தனது வாழ்க்கையை மாற்றும் ஒரு முடிவை



எடுக்க முடியும்? என்பது ஒரு பெரும் கேள்வி. அவள் அதனுடைய எல்லா தாக்கங்களையும் விளைவுகளையும் புரிந்து கொள்ள முடியாத வாழ்வின் பருவத்தில் உள்ளார்.

இதெல்லாம் எப்படி அறிவியல் பூர்வமாக இருக்க முடியும்? அவளின் கர்ப்பத்தினால், தன் சொந்த ஊரில் உருவாகும் அவதூறு, நிராகரிப்பு, அவமானம், அவள் குடும்பம் மற்றும் அவளுடைய வருங்கால கணவர் யோசேப்பு மீது ஏற்படுத்தும் தாக்கம் என்ன? இதெல்லாம் அவளால் அந்த வயதில் அறிய முடியாது. அவள் இந்த எல்லா காரணிகளையும் கருத்தில் கொள்ள முடியாதவள். எனவே அவளுடைய பதில் ஓர் எளிய மனித ராகியவருடைய பதிலாக அமைகின்றது. நாம் மரியாவை ஓர் எளிய பெண்ணாகப் பார்ப்பதற்குப் பதிலாக, கடவுளை நம்பும் ஒரு இளம் கன்னிப் பெண்ணாக பார்க்க வேண்டும் என்பது அவரது பதில் எமக்குப் புகட்டும் பாடமாகும்.

அதன்பின்பு தன் மகனின் பிறப்புக்காக தன்னை தயாரிக்கும் விதத்தில் தன் வீட்டிலேயே தங்க வேண்டிய அன்னை மரியா, தன் வயது முதிர்ந்த உறவினருக்கு உதவி செய்ய சென்ற செயல், தன் கருவில் வளரும் இறைமகனின் சீடராக மாறிவிட்டார் என்பதை காண்பிக்கின்றது. இறையன்பின் கனியாகப் பிறரன்பு இருக்க வேண் டும். அங்கு "நான்" என்பதல்ல, மாறாக, தேவையிலிருப்போரே மையமாக இருக்க வேண்டும் என்ப தைக் கன்னி மரியா காட்டிநிற் கின்றார்.

இங்கு பனி பூத்த மங்குலிலே மடி தாங்கிய மனுமகனைக் கொண்டு தங்கிட, இடமின்றித் தவித்த அன்னையை நினைத்துப் பார்க்க வேண்டும். நாகரிகங்கள் தோன்றிய காலத்திலும் இறைவனின் கட்டளைக்கு அடிபணிந்து, இதோ, இறைவனின் அடிமை! என்று தாழ்பணிந்த அன்னையை நாம் முன் மாதிரியாக எண்ணிப் பார்த்தாலே போதும்.

**ம.பிரான்சிஸ்க்-ஆசிரியர்,**
**தொடர்பாடலும் ஊடகக் கற்கை மற்றும் கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

## பாலகனின் மீட்பரே வருக!

**பாலமுது தந்த தாய்மரியாள் மணி வயிற்றில்**
**மூலவனின் சாயலொடு முத்தான குடும்பத்திலுதித்து**
**காலமது தந்த கடவுளின் மகனாக வளர்ந்து**
**கருணை பொழி முகத்தோடு கண்டவர் பிரமித்து நிற்க**
**பாலனுயிர் மீட்டதுவும் கபோதி பார்வை பெற்றதுவும்**
**பாவிகளை மீட்பதற்காய் பாரச் சிலுவை சுமந்ததுவும்**
**மேலான உந்தன் படைப்பு மேலும் மகிமை பெற**
**வந்துதித்த பாலகனே உன்பாதம் சரணம் தேவே!**

**கலாபூசணம் மு.தணிகாசலம்**

## உலக இரட்சகரை தொழுவோம்

**மலர்ந்தது மார்கழி மனங்களும் மகிழ்ந்தன**
**மேதினி குளிரினில் நனைந்தே போனது**
**கலம்கரை சேரும் கோபுர ஒளிபோல**
**குடில்தனில் பாலகன் கிறிஸ்து பிறந்தார்**
**நலம்தரும் அன்னை மேரியின் மைந்தன்**
**நிதமருள் பகரும் உலக இரட்சகர்**
**தலமெங்கும் பொற்கிண்ண நற்கருணை நாதரின்**
**தேனாகும் நத்தார் திருநாளில் தொழுவோமே.**

**கலாபூசணம் கே.ஆர்.திருத்தவராஜா.**

## மைந்தனைத் தந்த நாளிதெனப் பாடு

**பாடினர் அன்று ஆதாம் ஏவாள்**
**பாவப்பெரும் பாட்டு -அவர்**
**பாடலினாலே பாரினில் மக்கள்**
**பட்டார் பெரும்பாடு**
**வாடிய மக்கள் பாடிய வேதனைப்**
**பாடலினைக் கேட்டு -தேவன்**
**நாடியே நமக்கு மைந்தனைத் தந்த**
**நாளிதெனப் பாடு**

Merry Christmas!

**நாடியேவந்த தூதன் உரைத்தநற்**
**செய்தியிலே மகிழ்ந்து- ஒன்று**
**கூடியே மேய்ப்பர் கோமகனைக் காண**
**சென்றனரே விரைந்து**
**ஆடிக் களித்து ஆண்டவனின் திருப்**
**பாதமதை அடைந்து- அவரை**
**பாடிப் புகழ்ந்து போற்றிப் பரவி**
**நின்றனரே பணிந்து**

**தீர்க்க தரிசிகள் ஞானிகள் என்று**
**எத்தனையோ பேர்கள்- தேவ**
**மார்க்க முறைகளை மக்களுக்கு உரைக்க**
**மண்ணில் பிறந்தார்கள்**
**மூர்க்க மனம்கொண்ட மாந்தர் அவர்களை**
**ஏற்க மறுத்தார் -அவரை**
**சீர்ப்படுத்தவே தேவன்தன் மைந்தனைப்**
**பூமியில் தந்தார்கள்.**

**பூத்திருந்த புது வெள்ளியொன்று உயர்**
**வானத்திலே அன்று -நாடு**
**ராத்திரி வேளை மைந்தன் உதிப்பைக்**
**காட்டியதே நின்று**
**சாஸ்திரி மூவர் மின்னொளி காட்டிய**
**வழியினில் சென்று -தேவ**
**புத்திரனை வழி பட்டு வணங்கினர்**
**பரிசுகள் ஈந்து**

**டே.த.எட்வின். உடுவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்குத் தொற்று...

மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தற்போது 114 பேர் டெங்கு தொற்றுக்குள்ளாகி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே இருந்த விடுதிகளில் இடப்பற்றாக்குறை காணப்பட்டதன் காரணமாக மேலதிகமாக இரண்டு காய்ச்சல் விடுதிகளை இந்த டெங்கு நோயாளர்களுக்கென புதிதாக ஆரம்பித்திருக்கின்றோம்.

டெங்குத் தொற்றுக்குள்ளாகி விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 114 பேரில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் சாதாரண காய்ச்சலுடன் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அதே போல அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு தீவிர கண்காணிப்பில் சிகிச்சையளிக்கப்படுகிறது.

மேலும் சுகாதார அமைச்சினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டு டெங்கு தொற்றுக்குள்ளானோருக்குரிய மருந்து வகைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதன் காரணமாக விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான சிகிச்சைகள் உரிய முறையில் வழங்கப்படுகின்றது எனவும் தெரிவித்தார். (ந-7,9)

## அசுவெசும...

இதன்படி அடுத்த ஆண்டு முதல் இந்த எண்ணிக்கை 4 இலட்சம் குடும்பங்களால் அதிகரிக்கப்பட்டு, 2.4 மில்லியன் குடும்பங்கள் நன்மை பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அசுவெசும திட்டத்துக்குள் உள்வாங்கப்படுபவர்களுள் சிறுநீர் தொற்றாளர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக வரவு செலவு திட்டத்தின் ஊடாக 207 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,9)

## 1004 கைதி...

திஸாநாயக்க இதனை தெரிவித்தார்.

பல்லேகல சிறைச்சாலையில் இருந்து 162 பேரும், வெலிக்கட சிறைச்சாலையில் இருந்து 42 பேரும் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து 47 பேரும் திருகோணமலை சிறைச்சாலையில் இருந்து 12 பேரும் வவுனியா சிறைச்சாலையில் இருந்து 25 பேரும் யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருந்து 16 பேரும் அடங்கலாக பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இதனடிப்படையில் இன்றைய தினம் மொத்தமாக 1004 பேர் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,9)

## டெங்குக் காய்ச்...

என்ற 25 வயதான மாவிட்டபுரத்தைச் சேர்ந்த மாணவியே உயிரிழந்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட குறித்த மாணவி, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த மாணவி சிகிச்சை பனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்

உயிரிழப்புத் தொடர்பான உடற்கூற்று பரிசோதனை யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்றது.

இதன்படி டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குறித்த மாணவிக்கு செலுத்தப்பட்ட மருந்தின் ஒவ்வாமையே உயிரிழப்பு ஏற்படக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உயிரிழந்த மாணவியின் உடற்கூற்றுப் பகுதி மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனையின் பின்னர் மாணவியின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ந-7,9,33,60)

## ஆட்சியாளர்...

தளிக்கப்பட வேண்டும் அந்த இலக்கை அடைவதனை நோக்கி நாம் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றோம் என்றார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வினை வழங்குவதிலிருந்து ஆட்சியாளர்கள் விலகி நிற்கவே முடியாது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அதிகாரப்பகிர்வை நோக்கிய செயற்பாட்டில் தொடர்ந்தும் பாடுபட்டு வருகிறோம் என தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வடக்கு, கிழக்கு பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின் போது, புதிய அரசியலமைப்பு உருவாக்கம், அரசியல் கைதிகள் விடுதலை உட்பட பிரச்சினைக்கான தீர்வு, அதிகாரப் பகிர்வு விடயங்களை ஒரு வருட கால அவகாசத்துக்குள் முன்னெடுப்பதாக ஜனாதிபதி ரணில் தெரிவித்திருந்தார். இந்நிலையில், கருத்து வெளியிடும் போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தமிழ் மக்கள் நீண்டகாலமாக இனப் பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வொன்றை வலியுறுத்தி வருகிறார்கள். அவர்கள் அதற்காக தொடர்ச்சியாக தமது ஆணையை வழங்கியும் வருகின்றார்கள்.

அந்த வகையில், ஆட்சியாளர்கள் இனப் பிரச்சினைக்கான தீர்வினை தொடர்ந்தும் காலம் கடத்திச் செல்ல முடியாது. அவர்கள் தீர்வினை வழங்குவதிலிருந்து விலகி நிற்கவே முடியாது என்றார். (ந-7,9)

## மோதிக்கொண்ட...

முற்றிய நிலையில் கைகலப்பாக மாறியுள்ளது.

இதனால் ஆசிரியர் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மாணவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம்தொடர்பாக சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சம்பவம்தொடர்பாக விசாரணைகளைமேற்கொள்ள குழுவொன்றை அனுப்பியுள்ளதாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ந-7,9,33)

## அதி...

எமது மாகாணத்தின் மாகாண சபையை பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளிலான வேலைத்திட்டம்ஒன்றினை பொலநறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நேற்று நடத்தியது.

இதில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர் யுவதிகளும் தொடர்ச்சியான அரசியலில் பங்குபற்ற வேண்டும் ... டுள்ளதாக உள்ள தேர்தல் செயற்பாடுகள் குறித்து மக்களை அறிவூட்டுவதன் மூலம் மக்களுக்குமாகாண சபை குறித்து தெளிவூட்ட முடியும். நாட்டின் அபிவிருத்திக்கு மாகாண சபை அதிகாரம் பரவலாக்கப்படல் வேண்டும். மாகாணங்களுக்கிடையே அபிவிருத்திக்கு போட்டிகளை ஏற்படுத்த வேண்டும். தென்பகுதி மாகாண சபை கட்டமைப்பினை விட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் குறித்த முறைமையில் விருத்தி கண்டுள்ளதாகவும் நிர்வாக அதிகாரங்கள்மட்டுமன்றி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுமாயின் அதற்கு நாம் இணங்க வேண்டும்.

நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாப்பு பிரஜைகளாகிய எம்மனைவரும் பொறுப்பாக அமைவதாகவும் மாகாண சபை மற்றும் அதிகார பரவலாக்கம் தொடர்பில் தென் பகுதி மக்கள் தேவையற்ற பயத்தில் உள்ளனர் எனவும் இதன்போது தெரிவித்தார். (ந-7,9)


லக்கி 7 VIP
திகதி 2023.12.24 சீட்டிழுப்பு இலக்கம் 0164
F 0 3 9 6 2 4 F
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.12.24 சீட்டிழுப்பு இலக்கம் - 1368
A 21 23 32 49 A
Double Chance 26120

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3580
சீட்டிழுப்பு திகதி 24.12.2023
K 04 43 75 80
K 00805

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.24
சீட்டிழுப்பு இலக்கம் 0647
சிம்மம் 11 19 34 60 சிம்மம்
11952 21

மஹஜன சம்பத
திகதி 2023/12/24
சீட்டிழுப்பு இலக்கம் 5338
D 6 7 3 0 8 7
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1686
L 08 14 55 64 76
Double Chance 37619

ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை வெற்றி வாரம் : 2138 வர்ணம் : இளம் பச்சை சீட்டிழுப்பு திகதி : 2023.12.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,486,314.40/-
02 05 19 62 N
552179
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.12.2023 வெற்றி வாரம் 046
A 1 6 5 2 0 7
48297
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 24,727,071.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2312 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.24 தினம் ஞாயிற்றுக்கிழமை
04 35 43 67 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,206,196/-
71091
DLB

சனிதா Shanida
திகதி 2023.12.24 வெற்றி வாரம் 4473 வர்ணம் இளஞ்சிவப்பு
49 50 56 57 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,861,428.00
59359
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி SASIRI
வெற்றி வாரம் 419 சீட்டிழுப்பு திகதி 2023.12.24 கபிலம்
வெற்றி இலக்கங்கள் 04 41 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,156,680/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4024 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.12.24 தினம் ஞாயிற்றுக்கிழமை
33 38 40 54 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-
642953
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 18 22 29 34 37
1488 மஞ்சள் 2023.12.24 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 481,749,174.20
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
**0777 554 528** (18357)

## மணமகள் தேவை

உத்தர நட்சத்திரம் 6 ஆம் இடத்தில் சூரியன் செவ்வாய் உள்ள பட்டதாரி அரச உத்தியோகத்தருக்கு மணமகள் தேவை.

**076 347 3419** (18355)

## சமையலாளர் தேவை

சிற்றூண்டி மற்றும் தேநீர் தயாரிப்பதற்கு ஆண் சமையலாளர் தேவை.

**சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்**
இல.55, 57 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C-7995)

## காணி விற்பனைக்கு

கல்கிசை காலி வீதிக்கு அருகில் 8.26 பேர்ச்சஸ் காணி வீட்டுடன் விற்பனைக்கு உள்ளது. இல.33,பிரிவெனா வீதி, கல்கிசை.(பார்க் சாலைக்கு சந்திப்பில் பிம்சவியா தலைப்புடன்)
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
இடைத்தரகர் இல்லை.
வணிக அல்லது குடியிருப்புக்கு ஏற்றது.
ஜேம்சன் -
**+9476 634 4965** (18353)

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

**இல. 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி.



- செய்கூலி, சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
  ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலைவரத்தின் படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும். (C-8002)

**077 165 1729, 077 773 0567, 021 222 8334**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகர், திருநெல்வேலி, நல்லூர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

**076 189 8521** (18356)

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-8011)
**0777-068-777**
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

**VISA CONSULTANT**
134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna.
**077 038 5584** (18358)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-8011)

V2 TRAVELS

வேலை கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் நந்தாவில் அம்மன் கோவில் பின்புறமாக 3 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

இராசபாதை றோட்டுக் கரையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (18346)

**077 882 8638**

## கட்டட வேலை

உங்கள் வீட்டினை Labour Contract முறையில் நிர்மானித்துத் தரப்படும். (18344)

**076 983 6255**


## மரண அறிவித்தல்



மலர்வு
20 - 05 - 1939

உதிர்வு
23 - 12 - 2023

### திருமதி நவமலர் கணபதிப்பிள்ளை

சாயி இல்லம் இமையாணன் மேற்கு உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமலர் கணபதிப்பிள்ளை அவர்கள் 23.12.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற பிரதம எழுதுனர் தம்பையா கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசதுரை - யோக்கியம் தம்பதியினரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற தம்பையா - மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் யோகதர்சினி(நோர்வே), கருணைரூபன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயகுமார், மாலதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் திலக்கசன், அபிசன், ஆதித்தியன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக சாயி இல்லம் இமையாணன் மேற்கு உடுப்பிட்டியில் 25.12.2023 திங்கட்கிழமை 26.12.2023 செவ்வாய்க்கிழமை வைக்கப்பட்டு 27.12,2023 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


சாயி இல்லம்,
உடுப்பிட்டி. (C-8005)

மகன் - 076 232 5279
மகள் - 077 471 0814

தகவல்: குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம்
14 . 09 . 1935

மறைவு
23 . 12 . 2023

### நாகலிங்கம் ஆனந்தராசா

(ஓய்வுநிலை லிகிதர் தேசிய வீடமைப்புத் திணைக்களம் யாழ்ப்பாணம்
பொறுப்பாசிரியர் - சைவத் திருத்தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை)

யாழ்.சந்தை வீதி, உடைபாட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஆனந்தராசா அவர்கள் கடந்த 2023.12.23 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், நாகரத்தினம், வானசேகரம், சிவயோகம், புஸ்பராசம், இராசலட்சுமி, கௌசலாதேவி, சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ரதிதேவி செல்லப்பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் நாகநந்தினி, விக்னராஜா (லண்டன்), விமலராசா (அதிபர் - யா/கரணவாய் தாமோதரா வித்தியாலயம்), பிறேமினி, வித்தியா (ஆசிரியர் - யா/வல்வை அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரலிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர் - யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி), சதாயினி (லண்டன்), ரதினி, சிவகுமாரன், பகீரதன் (பிரதி அதிபர் - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தர்சனா - வாகீசன், விமேஷ், கிர்த்திகா, ரவீஷ் - அனோஜா, சகானா - சாய்விக்னேஷ், சங்கீத், வினேஷ், ஜயகிலன், ஜயனுகா, சாருஜா, கிருஷாந்தன், வேணுஜா, திவ்யா, மோனிஷா, சுவஸ்திகன், பிரியங்கா, கீர்த்தி, கார்த்திகன், ஆர்த்திகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் மேனுஜன், ஜானுஜன், வினுர்யன், அபீஷ், அஸ்மிதா, ஷாஷ்விகா ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2023) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை வீதி, உடுப்பிட்டி. (C-8008)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.